On 01.07.2024 at Cyber PS, Puducherry a financial case in Cr.No. 103/2024 was registered on the complaint of one Tmt. R. Kokila(38) of Karuvadikuppam, Lawspet, Puducherry. In which she stated that she had viewed an Ad on social media regarding an online investment to get huge returns. On contact, the unknown person sent fake domains/websites and induced the complainant to invest in that fake investment website under the pretext of huge returns on the investment and thereby looted an amount of Rs. 18,04,556/-. In this regard, 8 accused persons were arrested, and computers and other assets were seized.





BANNED TOBACCO PRODUCTS SEIZED



On 26.08.2024, an accused person namely Venmani Raja (38) of Nedungadu, Karaikal was arrested while he was found in possession and selling tobacco products to boys below the age of 18 years near Murasoli Nagar Road, Western Bypass Road, Karaikal and hence the tobacco products i.e. (i) HANS (blue colour) – 150 Pouches, (ii) HANS (Red colour) – 34 Pouches, (iii) Cool Lip – 57 Pouches, (iv) Vimal Pan Masala – 50 Pouches, (v) V1 Tobacco – 52 Pouches, totally worth about Rs.3,67,860/- were seized from the accused person.

WORK ABROAD SCAM CRACKED



On September 3, 2024, a case (Cr.No. 168/2024) was registered at Town Police Station, Karaikal, following a complaint by Tmt. Asina Begum (44) alleged that a travel agency operator of "Sahara Travels" in Karaikal, collected ₹81,500 from her with promises to send her husband abroad for work and Umrah at a low cost. However, the accused neither arranged for the trip nor funded the amount. During the investigation, the accused person was arrested on 05.09.2024 and confessed to defrauding nearly ₹22 lakhs from multiple customers for similar services. An amount of ₹1,25,000 in cash and receipt books were seized from him.

POLICE ARRANGEMENTS FOR IMPORTANT FAIRS/FESTIVALS

VINAYAGAR IDOL IMMERSION PROCESSION





VILLIANUR TEMPLE CAR FESTIVAL









VEERAMPATTINAM TEMPLE CAR FESTIVAL





THIRUKANJI MASI MAGAM FESTIVAL





KANNIAKOIL TEMPLE FIREWALK FESTIVAL





KARAIYAMPUTHUR TEMPLE FIREWALK FESTIVAL





SANIPEYARCHI FESTIVAL, THIRUNALLAR, KARAIKAL





MANGANI FESTIVAL, KARAIKAL





CARNIVAL, KARAIKAL





PEOPLE'S FESTIVAL,YANAM









ST. THERESA FESTIVAL, MAHE





NEW YEAR ARRANGEMENTS

Elaborate Law & Order/Traffic/Security arrangements were made during the celebration of New Year eve on 31.12.24.












FAREWELL FUNCTION FOR THE RETIREES

Farewell Functions were organized at the PHQ for the Police officials who retired from service on attaining superannuation.

JANUARY 2024

1) R.Vinayagam, SI of Police, 2) G.Selvaraj, SI of Police, 3) Z.Mouthouramane, SI of Police, 4) P. Jayasamkar, SI of Police and 5) R.Baskaran, Spl.Grade-I Driver.





FEBRUARY 2024

1) R. Mohandas, SI of Police, 2) S. Santhappan, SI of Police, 3) T. Ponnurangam, SI of Police, 4) S. Ratchaganathan, SI of Police, 5) Sankar, SI of Police and 6) A.Simon David Pierrot, ASI of Police.





MARCH 2024

1) A. Yakoob Baig, Inspector of Police, 2) Balaraman OP, Si of Police, 3) Radjy N, SI of Police, 4) Tamijavanan R, SI of Police 5) C. Ganapathy, HC 2196, 6) Devadass HC 2302.





APRIL 2024

1) Richard V, SI of Police, 2) Jerald Roger, ASI of Police





MAY 2024

1) Rajasankar Vellat, Supdt. of Police, 2) K. Ramesh, Inspector of Police 3) Anandraj A, SI of Police, 4) Nagueswara Rao E, SI of Police, 5) Susai Raj E, SI of Police, 6) N.P Murugaiyan, SI of Police, 7) S. Rozario, SG SI, 8) S. Baskaran, HC 1548, 9) Radhakrishnan, HC 1891, 10) Gogulrajou, HC 1910, 11) Baskaran, HC 2378 and 12, R. Bernath, Cook





JUNE 2024



1) Ganesamoorthy R, SI of Police 2) Manjini, HC 1702

JULY 2024

1) Gunalan K, SI of Police, 2) Radjassegarane N, SI of Police, 3) Ramamoorthy P, SI of Police, 4) V. Murugan, PC 3493, 5) P. Jepi, Grade-I driver





AUGUST 2024

1) Anbazhagan P, SI of Police, 2) Dhanabal S, SI of Police, 3) Pajanisamy K, SI of Police, 4) P. Sathiya Narayana, HC 2309, 5) R. Carounagarane, PC 3627, 6) K. Rani, WHC 2032(SG ASI), 7) N. Hemamalini, WPC 3990.





SEPTEMBER 2024

1) Arjunan G SI of Police 2) Vengadesaperumal D, SI of Police, 3) L.V. Ravi, HC 1850





OCTOBER 2024

1) Manoharan N, SI of Police, 2) Radhakrishnan EK, SI of Police, 3) Satyanarayana MVV, SI of Police, 4) Selvaraj @ Sivanandam, HC 1886, 5) Arumugam, HC 2239, 6) Malathy.R, WHC 2151.





NOVEMBER 2024

1) Selvam C, SI of Police, 2) Ramamoorthy, HC 2177, 3) Krishnaraju, HC 2184 4) K. Veerappan, HC 2422, 5) Vijayi Kunhi Parambath, SG WHC 2546, 6) V. Gowri Cook.





SPORTS ACTIVITIES

Puducherry Police Hockey Team participated in the 72nd All India Police Hockey Championship at Jammu & Kashmir in January 2024.





Puducherry Women Police participated in the All India Police Special Shooting Competition (Women) held at Chennai in June 2024.





Puducherry Police Team Participated in the 9th All India Police Judo Cluster at Guwahati in June 2024.





PUDUCHERRY POLICE IN NEWS

மருத்துவமனையில் இருந்து வெளியேற்றம்

புதுச்சேரியில் உணவின்றி தவித்தவருக்கு உதவி

காவல்துறையின் மனிதாபிமானமிக்க செயல்

புதுச்சேரி, டிச. 8: கள்ள குறிச்சி மாவட்டத்தை சேர்ந்தவர் ஜெகன்(44) திருமணமாகாதவர். வேலை தேடி புதுச்சேரி வந்துள்ளார். தனியார் சிலிண்டர் விநியோக நிறுவனத்தில் சிலிண்டர் டெலிவரி செய்யும் பணியில் சமீபத்தில் வந்தார். கடந்த சில தினங்களுக்கு முன்பு சிலிண்டர் தூக்கி செல்லும்போது அவரது முதுகு தண்டு பகுதியில் பாதிப்பு ஏற்பட்டு, புதுச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவருக்கு உதவிக்கு யாரும் இல்லாத காரணத்தினால், அவர் மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இதனால் அவர் கடந்த 4 நாட்களாக மருத்துவமனை அருகே சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் கற்றி திரிந்துள்ளார். நேற்று மருத்துவமனை அருகே உள்ள சட்டசபை எதிரில் மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அங்கு பணியில் இருந்த போலீசார் பார்த்து, அவருக்கு சட்டை அணிவித்து உணவு வாங்கி கொடுக்க சாப்பிட வைக்கார். மீண்டும் அவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டனர்.





திருபுவனத்தில் சினியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமையில் குறைகேட்பு கூட்டம் நடந்தது.

போதைப்பொருள் விற்பனையை தடுக்க நடவடிக்கை

குறைகேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் வலியுறுத்தல்

காரைக்கால், டிச.8- காரைக்காலில் தலைமை பாதைக்கு செல்லும் இளைஞர்களை மீட்க போதைப்பொருள் விற்பனையை தடுக்க வேண்டும் என்று குறை கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் வலியுறுத்தினர்.

குறைகேட்பு கூட்டம்

காரைக்கால் மாவட்டத்தில் அனைத்து போலீஸ் நிலையங்களிலும் தோறும் குறைகேட்பு கூட்டம் நடத்தி தீர்வு காணப்படுகிறது. அதன்படி குறைகேட்பு கூட்டம் திருபுவனை சப்-டிவிஷனுக்கு உட்பட்ட திருபுவனை, வில்லியனூர், மண்ணாடிப்பட்டு, பாகூர் ஆகிய போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்கான குறைகேட்பு கூட்டம் திருபுவனை சப்-டிவிஷன் அலுவலகத்தில் நேற்று நடந்தது. சப்-டிவிஷனல் போலீஸ் அதிகாரி லட்சுமி சவுஜன்யா தலைமை வகித்தார். இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள், காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக பள்ளி, கல்லூரி மாணவர்களை குறி வைத்து கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாகவும், அவ்வாறு விற்பனை செய்பவர்கள் மட்டுமே போலீசார் கைது செய்கின்றனர். ஆனால் போதைப்பொருட்களை சப்ளை செய்யும் முக்கிய குற்றவாளிகளை கைது செய்ய இல்லை.

கடுமை நடவடிக்கை

போதைப் பழக்கத்திற்கு பள்ளி-கல்லூரி மாணவர்கள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு தேவையான விழிப்புணர்வுகளை போலீசார் ஏற்படுத்த வேண்டும்.

சிறுவர்கள் குற்றங்களில் ஈடுபடுவதாக புகார் வந்தால் அவர்கள் மீது கடுமை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து பேசிய போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா பேசுகையில், "காரைக்கால் மாவட்டத்தில்

கால்நடைகள் சாலையில் திரிந்தால் உரிமையாளர்கள் மீது வழக்கு

டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம் உத்தரவு

கால்நடைகளை சாலையில் திரிய விட்டால், உரிமையாளர் மீது வழக்கு பதிவு செய்ய டி.ஐ.ஜி., சந்தியசுந்தரம் உத்தரவிட்டார்.

புதுச்சேரியில் போக்குவரத்து பிரச்னை பெரும் தலைவலியாக மாறி வருகிறது. 40 ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே சாலைகள் தான் தற்போதும் பயன்பாட்டில் உள்ளது. மக்கள் தொகை, வாகன பெருக்கத்திற்கு ஏற்ப புதிய சாலைகள், மேம்பாலங்கள் உருவாக்கப்படவில்லை.

தரமற்ற சாலை பணியால், ஆங்காங்கே பள்ளம் உருவாகி பல்லாங்குழி சாலையாக மாறிவிட்டது. தரமற்ற சாலை, தாறுமாறாக செல்லும் வாகனங்கள் மத்தியில் மக்கள் உயிரை கையில் பிடித்து கொண்டு சாலைகளில் பயணித்து வருகின்றனர். இதுதவிர சாலையில் திரியும் கால்நடைகளால் மேலும் ஆபத்து அதிகரித்து விடுகிறது.

கால்நடைகள் மீது வாகனம் மோதி பலர் உயிரிழக்கின்றனர். இது தொடர்பாக போலீஸில் புகார் அளித்தால், கால்நடை பிடிப்பது எங்கள் வேலை இடையாது; நகராட்சியில் கூறுமாறு சொல்கின்றனர்.

நகராட்சியினர் கால்நடையை பிடிக்க வந்தால் ரவுடிகள் மிரட்டுவதாக நேற்று நடந்த மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்கள் டி.ஐ.ஜி., சத்திய சுந்தரத்திடம் புகார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து, சாலையில் கால்நடைகள் திரிய விட்டால் போலீசார் நகராட்சி மூலம் பிடித்து கோ சாலையில் விட ஏற்பாடு செய்ய வேண்டும்.

கால்நடையை மீட்க யாரேனும் வந்தால், அவர்கள் மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என, போலீசாருக்கு உத்தரவிட்டார்.

கஞ்சா விற்ற இளைஞர் கைது

புதுச்சேரி, டிச. 8: புதுச்சேரி வில்லியனூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட தொண்டமாநத்தம் மெயின் ரோட்டில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர் ஒருவர், அப்பகுதியில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், சப்-இன்ஸ்பெக்டர் பெரியசாமி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

அப்போது அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த ஒருவரை போலீசார் பிடித்து விசாரித்தனர். விசாரணையில், அவர் தொண்டமாநத்தம் பகுதியை சேர்ந்த ரமணா (19) என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார்



அவரிடம் 60 கிராம் கஞ்சா இலை மற்றும் அரிவாள் மறைத்து வைத்திருந்து தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் ரமணா மீது கஞ்சா மற்றும் ஆயுத சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து கைது செய்தனர். தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு சிறையில் அடைத்தனர்.

நெட்டப்பாக்கம் காவல் நிலையத்தில் பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



நெட்டப்பாக்கம் காவல் நிலையத்தில் மக்கள் குறை தீர்வு கூட்டம் எஸ்.பி., வம்சிதர ரெட்டி தலைமையில் நடந்தது. அருகில் சப் இன்ஸ்பெக்டர் வீரபத்திரன்.

நெட்டப்பாக்கம், டிச. 8- நெட்டப்பாக்கம் காவல் நிலையத்தில் பொதுமக்கள் குறை தீர்வு கூட்டம் நேற்று நடந்தது.

போலீஸ் எஸ்.பி., வம்சிதர ரெட்டி தலைமை தாங்கினார். சப் இன்ஸ்பெக்டர் வீரபத்திரன் முன்னிலை வகித்தார்.

குறைதீர்வு கூட்டத்தில் நெட்டப்பாக்கம், கரிய மாணிக்கம், பண்டசோழநல்லூர், கோமுகி அணை, ஏரிப்பாக்கம் உள்ளிட்ட 8 கிராமங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று குறைகளை எழுத்துப்பூர்வமாக எஸ்.பி.,யிடம் அளித்தனர்.

மனுவினை பெற்றுக் கொண்ட எஸ்.பி., வம்சிதர ரெட்டி கூறுகையில், 'பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட புகார்கள் மீது, விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நபர்களை அழைத்து விசாரணை நடத்தி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

இந்த குறைதீர்வு கூட்டத்தில், நிருக்கனூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜ்குமார், சப் இன்ஸ்பெக்டர் பிரியா, திருபுவனை சப் இன்ஸ்பெக்டர் குமரவேல், காட்டேரிக்குப்பம் சப் இன்ஸ்பெக்டர் தமிழரசன், மங்கலம் சப் இன்ஸ்பெக்டர் பெரியசாமி மற்றும் போலீசார்

வாலிபர் கொலை வழக்கு : சிறுவன் உட்பட 4 பேர் கைது

விலிலியனூர், ஜன. 17-

விலிலியனூரில் முன் விரோதத்தில் வாலிபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சிறுவன் உள்ளிட்ட 4 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

விலிலியனூர் அடுத்த உறுவையாறு பேட்டை சேர்ந்தவர் கோவித்த ராஜ் மகன் தனபால்,22; இவரை கடந்த 14ம் தேதி இரவு மர்ம கும்பல் வெட்டி கொலை செய்தது.

இதுகுறித்து விலியனூர் போலீசார் வழக்கு பதிந்து, இன்ஸ்பெக்டர் அறுமுகம் தலைமையிலான தனிப்படை போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

அதில், மூன்றுபேர் பொறையூர் பேட்டில் தத்தில் அதேபகுதியை சேர்ந்த நாகப்பன் மகன் ஞானபிரகாஷ், 24; தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து தனபாலை வெட்டி கொலை செய்தது தெரிய வந்தது.



■ விலியனூரில் முன் விரோதத்தில் வாலிபரை கொலை செய்த வழக்கில் சிறுவன் உள்ளிட்ட நான்கு பேரை போலீசார் கைது செய்தனர்.

அதன் பேரில், பதுங்கியிருந்த ஞான பிரகாஷ், 22; அங்கனான் மகன் ஜீவா, 24; சந்திர சேகர் மகன் சந்துரு, 21; மற்றும் 17 வயதுடைய சிறுவன் உள்ளிட்ட 4 பேரை கைது செய்தனர்.

மேலும், அவர்கள் கொலைக்கு பயன்படுத்திய கத்தி உள்ளிட்ட ஆயுதங்களையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர் நான்கு பேரையும் கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஞான பிரகாஷ் உள்ளிட்ட மூவரை சிறையிலும், 17 வயது சிறுவனை அரியாங்குப்பம் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் ஒப்படைத்தனர்.

இவ்வழக்கில் மேலும் தொடர்புடைய மூவரை தேடிவருகின்றனர்.



கோரிமேடு எல்லை பகுதியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

பாபர் மசூதி இடிப்பு தினம்: மாநில எல்லைகளில் போலீசார் தீவிர வாகன சோதனை

புதுச்சேரி, டிச.6- பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி புதுவை மாநில எல்லையில் போலீசார் தீவிர வாகன சோதனை நடத்தினர்.

பாபர் மசூதி இடிப்பு தினம்

அயோத்தியில் இருந்த பாபர் மஸ்ஜித் 1992-ம் ஆண்டு டிசம்பர் 6- ந்தேதி தகர்க்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 6-ந் தேதி நாடு முழுவதும் பாபர் மசூதி இடிப்பு தினம் அனுசரிக்கப்

இல் புதுவையில் அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் இருக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படி போலீஸ் டி.ஜி.பி. ஷாலினி சிங் உத்தரவிட்டார்.

தீவிர வாகன சோதனை

அதன்பேரில் பஸ், ரெயில் நிலையங்கள், வழிப்பாட்டு தலங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் போலீஸ்பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. புதுவை மாநில எல்லையான கோரிமேடு பகுதியில் இன்ஸ்பெக்

போலீசார் நேற்று தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது தமிழகத்தில் இருந்து புதுவைக்கு வந்த வாகனங்களை வழிமறித்து சோதனை செய்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்த நபர்களை பிடித்து விசாரித்தனர். இதேபோல் மாநில எல்லைகளான மதகடிப்பட்டு, கன்னியக்கோவில், கனகசெட்டிகுளம் ஆகிய பகுதிகளிலும் அந்தந்த பகுதி போலீசார் சோதனைச்சாவடிகள் அமைத்து தீவிர சோதனை

வாய்க்காலில் மாயமான வாலிபர்: ட்ரோன் மூலம் தேடும் பணி

புதுச்சேரி, டிச. 4–

துத்திப்பட்டு வாய்க்காலில் விழுந்த வாலிபரை ட்ரோன் மூலம் போலீசார் தேடி வருகின்றனர்.

வழுதாவூர் பக்கிரிப்பாளையம், ரைஸ்மில் தெருவைச் சேர்ந்தவர் தீபன்ராஜ், 32; அவரது நண்பர்களான பிரபாகரன், குப்புசாமி ஆகியோருடன் கடந்த 1ம் தேதி மழையை சுற்றி பார்க்க துத்திப்பட்டு சுத்துக்கேணி, ஊசுட்டேரி வாய்க்கால் சென்றனர்.

துத்திப்பட்டு சுத்துக் கேணி வாய்க்கால் அருகே இயற்கை உபாதை கழிக்க சென்றபோது வழுக்கி



■ சேதராப்பட்டு துத்திப்பட்டு வாய்க்காலில் விழுந்த வாலிபர் தீபன்ராஜை போலீசார் ட்ரோன் மூலம் தேடும் பணி நடந்தது.

வாய்க்காலில் விழுந்துள் ளார்.மழைநீர் அதிக அள

வில் சென்றதால் தீபன்ராஜ் அடித்து செல்லப்பட்டார்.

2 நாட்களாக தீயணைப்பு மற்றும் போலீசார் சம்பவ இடத்தில் தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் தீபன்ராஜ் கிடைக்கவில்லை.

நேற்று சேதராப்பட்டு போலீசார் ட்ரோன் மூலம் தேடும் பணியில் ஈடுபட்டனர்.

இன்ஸ்பெக்டர் பாலமுருகன், சப்இன்ஸ்பெக்டர் ராஜேஷ் ஆகியோர் ட்ரோன் மூலம் துத்திப்பட்டு வாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டனர். ஆனால் தீபன்ராஜ் கிடைக்கவில்லை.

குடியிருப்புக்குள் தண்ணீர் புகுந்தது சாலை மறியலில் ஈடுபட முயற்சி

திருக்கனூர், டிச. 4-

பொதுப்பணித்துறை அலட்சியத்தால் வாதானூர் ஏரி நிரம்பி குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்து, அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட முயன்றதால் பரபரப்பு நிலவியது.

செஞ்சி புலவர் காரணமாக செய்த கமலை வாய் புதுச்சேரியில் உள்ள பல்வேறு ஏரிகள் நிரம்பி வழிகிறது.

பம்பை ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணை மூலம் வாதானூர் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால், நேற்று காலை வாதானூர் ஏரி முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிந்தது.

ஆனால், வாதானூர் ஏரி நிரம்பி நிருமக்கல் ஏரிக்கு செல்லும் கோட்டு வாய்க்கால் தூர் வாரப்படாததால், தண்ணீர் அருகிலுள்ள வாதானூர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்தது. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் குடியி



■ வாதானூர் ஏரி நிரம்பி குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்ததால், மறியலில் ஈடுபட முயன்றவர்களிடம் போலீசார் பேசுவர்த்தை நடத்தினர்.

குப்புகளில் புகுந்த தண்ணீரை உடனே வெளியேற வலியுறுத்தி வாதானூர்-பி.வி.எல்.பாளையம் சாலை மீது மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த திருக்கனூர் சப் இன்ஸ்பெக்டர் பிரியா மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர், வாதானூர் ஏரியில் இருந்து குடியிருப்பு பகுதிக்கு தண்ணீர் வந்து பாதையில் மண் மூட்டை கலை அடுக்கி தண்ணீரை வெளியேறும் பணியில்

ஈடுபட்டனர். தொடர்ந்து, திருமக்கல் ஏரிக்கு செல்லும் வாய்க்கால் அடைப்புகள் சரிசெய்யப்பட்டதை இதைதொடர்ந்து, பொது மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனால், அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

பெண்களுக்கு அச்சுறுத்தல் எதிரொலி:

பஸ் நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பு

செல்போன் எண்ணை கொடுத்து புகார் தெரிவிக்க அறிவுறுத்தல்

திருவள்ளூர், டிச.7- பெண்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் புகார் தொடர்ந்து பஸ் நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

போதை ஆசாமிகள் அச்சுறுத்தல்

காரைக்கால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண்கள் சம்பந்தமான குறை கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதில் பெண்கள் சிலர் பேசுகையில் கூறியதாவது:-

திருவள்ளூர் பஸ் நிலையத்தில் இரவு நேரங்களில் மது போதையில் சில ஆண்கள் சுற்றி திரிகின்றனர். அவர்கள் பஸ் நிலையத்தில் பயணிக்கும் பெண்களை தவறான நோக்கத்தில் பார்ப்பதும், சில்மிஷத்தில் ஈடுபடுவதும் தொடர்கதையாக உள்ளது. இதனால் பஸ் நிலையத்தில் பயணிக்கும் பெண்கள் அச்சத்துடனே பயணிக்க வேண்டியுள்ளது. எனவே பஸ் நிலையத்தில் போலீசார் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

போலீசார் கண்காணிப்பு

இதைதொடர்ந்து காரைக்கால் பஸ் நிலையத்தில் இரவு முழுவதும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்று சீனியர் போலீஸ் சூப்பிரண்டு உத்தரவிட்டார். அதன்பேரில் காரைக்கால் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் தலைமையில் போலீசார் நேற்று பஸ் நிலையத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.



காரைக்கால் பஸ் நிலையத்தில் பெண்கள் பாதுகாப்பு குறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் கண்காணிப்பில் ஈடுபட்டார்.

இடமான நபர்களை பிடித்து விசாரித்தனர். இரவுநேரங்களில் பஸ் நிலையத்தில் பயணிக்க வரும் பெண்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தங்களது செல்போன் எண்ணை கொடுத்து புகார் தெரிவிக்கலாம் என்று அறிவுறுத்தினர். இதனை தொடர்ந்து பெண்கள் சிலர் தங்களது செல்போன் எண்ணை போலீசாரிடம் கொடுத்தனர். அப்போது அவர்களிடம் பேசிய போலீசார் எந்நேரம் வேண்டுமானாலும் புகார் தெரிவிக்கலாம், புகார் தெரிவித்தவர்கள் விவரம் ரகசியம் காக்கப்படும் என்றும் உறுதி அளித்தனர். மேலும் பஸ்சில் போலீசின் செல்போன் எண்ணை ஒட்டுமாறு உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

சேதராப்பட்டில் தீபாவளி சீட்டு நடத்தி ரூ.16½ லட்சம் மோசடி; தம்பதி கைது

சேதராப்பட்டு, டிச.8- சேதராப்பட்டில் தீபாவளி சிட்டு நடத்தி ரூ.16½ லட்சம் மோசடி செய்த தம்பதியை போலீசார் கைது செய்தனர்.

தீபாவளி சிட்டு பணம்

விழுப்புரம் மாவட்டம் வானூர் தாலுகா நாராணபுரம் ஸ்ராமத்தை சேர்ந்தவர் புரு ஷோத்தமன் (வயது 40). அவரது மனைவி தீதா (37). இவர் சேதராப்பட்டில் உள்ள தனியார் தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் கணவன்-மனைவி இருவரும் தீபாவளி சிட்டு பிரிப்பதாக தீதா வேலை செய்யும் தொழிலாளர்களிடமும், கரசூர், சேதராப்பட்டு, துத்திப்பட்டு, கடப் பேரிக்குப்பம் உள்பட பல்வேறு ஸ்ராமங்களில் சுமார் 100-க்கும் மேற்பட்ட மக்களிடம் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் வசூல் செய்து வந்தார்.

கணவன்-மனைவி கைது

தீபாவளி பண்டிகை முடிந்தும் பொதுமக்களுக்கு சிட்டு பணத்தை கொடுக்காமல் ஏமாற்றியதாக கூறப்படுகிறது. அந்த வகையில் சுமார் 58 ஆயிரம் மோசடி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் சிட்டு பணம் கட்டியவர்கள் தீதா வீட்டிற்கு சென்று பணம் தராமல் ஏமாற்றி வந்தார். இதுகுறித்து கரசூர் ஸ்ராமத்தை சேர்ந்த சாந்தி என்பவர் சிட்டு பணம் கொடுக்காமல் ஏமாற்றியதீதா மீது சேதராப்பட்டு போலீஸில் புகார் செய்தார். அதன்பேரில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வழக்குப்பதிவு செய்து புருஷோத்தமன் மற்றும் அவரது மனைவி தீதா ஆகிய 2 பேரையும் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு சிறையில் அடைத்தனர்.



கைது செய்யப்பட்ட புருஷோத்தமன், கீதாவை படத்தில் காணலாம்.

அரியாங்குப்பம் காவல் நிலையத்தில் பொதுமக்கள் குறை தீர்வு கூட்டம்

அரியாங்குப்பம், டிச. 22– அரியாங்குப்பம் காவல் நிலையத்தில் பொது மக்கள் குறை தீர்வு கூட்டம், நேற்று நடந்தது. எஸ்.பி., பக்தவச்சலம் தலைமை தாங்கினார்.

புதுச்சேரி தெற்கு பகுதியில் உள்ள, முதலியார் பேட்டை, அரியாங்குப்பம், தவளக்குப்பம், கிருமாம் பாக்கம், பாகூர் ஆகிய காவல் நிலையங்களில் இருந்து, இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், பங்கேற்ற பொதுமக்கள், பல்வேறு பிரச்னைகள் பற்றி, நாங்கள் காவல் நிலையத்தில், புகார் அளித்துள்ளோம்.

அதன் மீதான விசாரணை, கால தாமதம் ஏற்படுகிறது. வயது மற்றும் உடல் நிலை காரணங்களால், அடிக்கடி காவல் நிலையத்திற்கு வரமுடியாமல் உள்ளது.

அப்படியே வந்தால், இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ் பெக்டர் வெளியில் சென்றுள்ளதாக கூறுகின்றனர்.

சட்டம் ஒழுங்கு, சிவில் உள்ளிட்ட பிரச்னைகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, எஸ்.பி., யிடம் பொதுமக்கள் முறையிட்டனர்.



இணைய வழி மோசடியில் பொதுமக்கள் இழந்த ₹65.82 லட்சம் மீட்பு

தவறவிட்ட செல்போன்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு

புதுச்சேரி, டிச. 22: புதுச் சேரி டிஜிபி ஷாலினி சிங் உத்தரவின் படி, சட்டம் ஒழுங்கு சீனியர் எஸ்பி கலைவாணன் மேற்பார் வையில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காவல் நிலையங்களில் பொதுமக் கள் குறைகேட்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, சனிக்கிழமை யான நேற்று புதுச்சேரி கோரிமேடு இணைய வழி காவல் நிலையத்தில் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம் நடந்தது. இம்முகா மில் இணைய வழி எஸ். பி. பாஸ்கரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத் தில் 60க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து



புதுச்சேரி இணைய வழி காவல் நிலையத்தில் நடந்த மக்கள் குறைதீர்வு முகாமில் தலைமைப் செல்போனை மீட்டு உரியவரிடம் போலீசார் ஒப்படைத்தனர்.

சுமார் 82 ஆயிரம் பணத்தை நியாகராஜன், 57, த்தி. நேற்முறை தொகைகர் (எத்

பயிற்சி கட்டணம் ஆண்டுக்கு ₹ 6 ஆயிரம் நிர்ணயம்

காவலர் முதல் அதிகாரிகள் வரை உறுப்பினர் ஆகலாம்



கோரிமேட்டில் காவலர் உடற்பயிற்சி கூடத்தை கடந்த ஜூலை மாதம் முதல்வர் ரங்கசா திறந்து வைத்தார். படங்கள்: பார்வைப்பட்டர்.

பாகூர் அருகே பாலத்தில் இருந்து உடல் வீச்சு

உடற்கல்வி ஆசிரியர் கொலையில் ஆட்டோ டிரைவர் கைது

பாகூர், டிச.6- பாகூர் அருகே அடித்துக் கொன்று பாலத் தில் இருந்து வீசியது தொடர்பாக முக்கிய குற்றவாளியான ஆட்டோ டிரைவரை போலீசார் கைது செய்தனர்.



போலீசாரால் கைது செய்யப்பட்ட ஆட்டோ டிரைவர் சதீஷ்

சரயாக்கடையில் தகராறு

பாகூர் அடுத்த சோரியாங்குப்பம் ஸ்ராமத் தில் கடந்த 25-ந் தேதி தென்பெண்ணை ஆற் றுப்பாலத்தின் அருகில் கடலூர் அடுத்த வண் டிபாளையம் பகுதியை சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர் இனகரன் (வயது 38) அடித்துக் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

காதல் தோல்வியால் மது பழக்கத்துக்கு ஆளான இனகரன் சம்பவத்தன்று சோரியாங் குப்பம் பகுதிக்கு சாராயம் குடிக்க வந்துள்ளார்.

அப்போது அங்கு கடலூரை சேர்ந்த சில ருக்கும், சோரியாங்குப்பம் பகுதியை சேர்ந்த வர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு உள்ளது. இதனை இனகரன் வேடிக்கைபார்த் துள்ளார். பின்னர் தகராறில் ஈடுபட்ட கட லூர் பகுதியை சேர்ந்தவர்கள் ஆட்டோவில் புறப்பட்டனர். அவர்களுடன் இனகரனும் ஆட்டோவில் ஏறினார்.

சிறிது தூரம் சென்ற நிலையில், ஆட்டோ வில் இருந்தவர்கள் இனகரன் சோரியாங்குப் பம் பகுதியை சேர்ந்தவர் என்று நினைத்து, அவரிடம், தங்களை அடித்தவர்கள் பெயரை கேட்டு தாக்கி உள்ளனர்.

ஆட்டோ டிரைவர்

அப்போது எதிர்பாராதவிதமாக இனகரன் இறந்து போனார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் செய்வதறியாமல் கொலையை மறைக்கும் நோக்கில் இனகரன் உடலை பாலத்தில் இருந்து கீழே வீசி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது தெரியவந்தது.

இதையடுத்து கடலூர் அடுத்த தானம்தகர் பகுதியை சேர்ந்த அரவிந்த் (23) என்பவரை கடந்த 28-ந்தேதி போலீசார் கைது செய்தனர். முக்கிய குற்றவாளியான அதே பகுதியை சேர்ந்த ஆட்டோ டிரைவர் சதீஷ் (30) என்பவரை போலீசார் வலைவீசி தேடி வந்தனர்.

நேற்று முன்தினம் வீட்டில் இருந்த சதீசை பாகூர் இன்ஸ்பெக்டர் சதீத், சப்-இன்ஸ்பெக்டர் நந்தகுமார் மற்றும் போலீசார் கைது செய்தனர்.

பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி, காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர். சதீஷ் மீது ஏற்கனவே 2 கொலை முயற்சி உள் பட பல்வேறு வழக்குகள் இருப்பதாக போலீ சார் தெரிவித்தனர்.

ஊரகக்காவல்படை உதய தின விழா

போலீசாருடன் இணைந்து புதிய தொழில்நுட்பங்களை கற்க வேண்டும்



புதுச்சேரி கோரிமேடு காவலர் மைதானத்தில் ஊர்க்காவல்படை உதய தின விழாவில் ஊர்க்காவல்படை வீரர்களின் அணிவகுப்பை டிஜிஜி சத்தியசுந்தரம் பார்வையிட்டார்.

டிஜிஜி சத்தியசுந்தரம் அறிவுறுத்தல்

புதுச்சேரி, டிச. 7: புதுச்சேரி கோரிமேடு காவலர் மைதானத்தில் ஊர்க்காவல்படை உதய தின விழா நேற்று நடந்தது. ஊர்க்காவல்படை மற்றும் காவலர் பயிற்சி பள்ளி எஸ்.பி. ரங்கநாதன் வரவேற்றார். டிஜிஜிக்கள் சத்தியசுந்தரம் (சட்டம் ஒழுங்கு), பிரிஜேந்திர குமார் யாதவ் (ஆயுதப் படை மற்றும் பயிற்சி), ஸ்வீயர் எல்விக்கன் கலை வாணன் (சட்டம்-ஒழுங்கு), நாரா சைதன்யா (குற்றம் மற்றும் புலனாய்வு) மற்றும் ஊர்க்காவல்படை போலீஸ் சார் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டனர். முன்னதாக, ஊர்க்காவல் படை வீரர்களின் அணிவகுப்பு நடந்தது.

விழாவில் சட்டம் ஒழுங்கு டிஜிஜி சத்தியசுந்தரம் பேசியதாவது:

ஊர்க்காவல் படை அமைப்பானது பொது மக்களுக்கு எதிர்பாராத அசாதாரண சூழ்நிலையில் பாதுகாப்பு அளிப்பதற்காக கடந்த 1946ல் பம்பாய் மாகாணத்தில் முதன் முதலாக உருவாக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவில், இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் நடந்த இந்திய சீன போருக்குப் பிறகு 1965ல் மக்கள் சுயசார்பு உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக ராணுவத்தில் தலைப்படை, கடற்படை, விமானப்படை போல் எந்தவித சூழ்நிலையிலும் குடிமக்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த காவல்துறைக்கு துணையாக நிர்வாகத்திற்கு உதவும் வகையில் ஒரு சிவிலியன் தன்னார்வ பணியாக இந்த ஊர்க்காவல் படை உருவாக்கப்பட்டது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள சிவில் சமூகத்தில் பல்வேறு பிரிவுகளை சேர்ந்த தொழில் வல்லுநர்கள், தொழில் துறை தொழிலாளர்கள், கல்லூரி மாணவர்கள், அரசு ஊழியர்கள் இதில் பணியமர்த்தப்பட்டனர். 1965 அக்டோபர் மாதம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஊர்க்காவல் படை அமைப்பு தொடங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் அரசு ஊழியர்கள் மட்டுமே இதில் பணிபுரியும் வாய்ப்பினை பெற்றனர். பின்னர் போட்டித்தேர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டு வீரர்களை தேர்வு செய்து பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இந்த ஊர்க்காவல் படை வீரர்கள் பொது ஊழியர்களாக நியமிக்கப்பட்டனர். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது புதுச்சேரி ஊர்க்காவல் படையினர் தனித்துவமான சலுகைகளை கொண்டுள்ளனர். இன்சரி வேலை, மாதாந்திர சம்பளம், 6 மாதங்களுக்கு ஒருமுறை சுமூக சம்பள உயர்வு, அனைத்து துறையின் 10 பணி புரியும் வாய்ப்பு ஆகியவற்றை பெற்றுள்ளனர்.

மேலும், மற்ற துறைகளில் பணிநிரந்தரம் பெற அம்சார்ப்ஷன் முறையில் இடஒதுக்கீடும் வழங்கப்படுகிறது. 25% இடஒதுக்கீட்டில் காவல் துறை, தீயணைப்பு வார்டன், வாட்ச் & வார்டு மற்றும் பல்நோக்கு ஊழியராக பணியாற்றும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு ஊர்க்காவல்படையின் உயரதான 1991ல் கொண்டாடப்பட்டது. நீண்டகாலம் காலஇடைவெளிக்கு பிறகு தற்போதைய டிஜிபியின் சீரிய முயற்சியால் இன்று விழா மீண்டும் தற்போது நடக்கிறது. முதன் முறையாக ஊர்க்காவல்படை வீரர்களுக்கு இன் ஹவுஸ் ட்ரெயினிங் (போலீஸ் பயிற்சி போல்) அதாவது காவலர் பயிற்சி பள்ளியிலேயே 64 நாட்கள் முழுமையாக தங்கி கவாத்து பயிற்சி, துப்பாக்கி சுடும் பயிற்சி, அதனுடன் கூடுதலாக சட்டத்தினை தெரிந்துக் கொள்ளும் வகையில் சட்ட வகுப்புகளும் நடத்தப்படுகிறது.

மேலும், அவர்களுக்கு பயிற்சியின் காலத்திலேயே முழு ஊதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீண்ட வருடங்களுக்கு பிறகு கவாத்து ஊதியம் நான் ஒன்றுக்கு மொத்தமாக ₹20லிருந்து ₹1,050 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய காலகட்டத்தில் காவல் பணி என்பது மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது. குற்றம் புரிபவர்கள் புதுப்புது முறைகளையும் சுற்று தேர்ந்து குற்றம் புரிகிறார்கள். பொருளாதார குற்றங்கள் மற்றும் இணையதள குற்றங்கள் அதிகமாக நடக்கிறது எனவே நீங்கள் காவலர்களுடன் இணைந்து புதிய முறைகளையும், புதிய தொழிற்நுட்பங்களையும் தொடர்ந்து கற்க வேண்டும். நம்முடைய பணி மக்களை காப்பதே. நாம் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்தியும், சிறந்த சமூக சேவகராகவும், மக்களின் பிரச்சனைகளை சுமுகமாக தீர்க்கும் விதமாகவும் நம்முடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டும். நாம் எப்போதும் நடுநிலையாக, பாரபட்சமின்றி மக்களுக்கு சேவை செய்வது நம்முடைய தலையாய கடமையாக தாய்மை உணர்வுடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



கடற்கரை சாலையில் நடந்த குடியரசு தின விழாவில் எஸ்.பி., பாலச்சந்திரன், சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன், ஓய்வு பெற்ற உதவி சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராஜு கோதண்டபாணி ஆகியோருக்கு ஜனாதிபதி காவல் பதக்கம், சப் இன்ஸ்பெக்டர் ராஜனுக்கு மத்திய உள்துறை அமைச்சரின் காவல் பதக்கம், எஸ்.பி.,ர்சனா சிங், சப் இன்ஸ்பெக்டர் சாந்தப்பன், சிறப்பு நிலை ஏட்டு மணிகண்டனுக்கு கவர்னரின் பதக்கம் ஆகியவற்றை முதல்வர் ரங்கசாமி வழங்கி தமிழிசை பாராட்டினார்.

காவல் துறையினருக்கு ஜனாதிபதி பதக்கம் அறிவிப்பு

புதுச்சேரி, ஜன. 26-

குடியரசு தினவிழாவில் காவலுக்கான ஜனாதிபதி பதக்கம், கவர்னர் பதக்கம் காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசு தினவிழாவில் அசாதாரண சேவைக்கான காவல் பதக்கம், உணவு கடத்தல் தடுப்பு பிரிவு எஸ்.பி., ர்சனா சிங், இசைக்குழு சப் இன்ஸ்பெக்டர் சாந்தப்பன், கிழக்கு போக்குவரத்து எட்டு மனிகண்டன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கவர்னர் பாராட்டு சான்றிதழை மகளிர் போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ் பெகடர் சத்யா, மோப்ப நாய் பிரிவு ஏட்டு ராஜேந்திரன், காரைக்கால் கடலோர பிரிவு சிறப்பு நிலை ஏட்டு முருகதாஸ், புதுச்சேரி போலீஸ் பயிற்சி பள்ளி காவலர் ராமராஜா, காரைக்கால் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு உதவி சப் இன்ஸ் பெக்டர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பெறுகின்றனர்.



அனிதாராய் ர்சனா சிங் வீரவல்லவன்

இதேபோல் சுதந்திர தினம், குடியரசு தின விழாவில் சிறப்பாக செயல்படும் போலீ சாருக்கு ஜனாதிபதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2024ம் குடியரசு தின விழாவையொட்டி, ஜனாதிபதி பதக்கம் போலீஸ் தலைமையக சீனியர் எஸ்.பி., அனிதாராய், தெற்கு எஸ்.பி., வீரவல்லவன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவினை உள்துறை சார்பு செயலர் ஸ்ரீராம் பிரபு பித்துள்ளார்.

சிறந்த காவல் துறை அதிகாரிகளுக்கு கவர்னர் பதக்கம் வழங்கி கவுரவிப்பு

புதுச்சேரி, ஜன. 27-

புதுச்சேரியில் நடந்த குடியரசு தின விழாவில் காவல் துறையில் சிறந்த சேவையாற்றிய காவலர்களுக்கு கவர்னர் தமிழிசை விருது வழங்கி பாராட்டினார்.

ஜனாதிபதி பதக்கம்

விழாவில் 2022ம் ஆண்டு குடியரசு தின விழாவில் அறிவிக்கப்பட்ட ஜனாதிபதிக்கான காவல் பதக்கம் எஸ்.பி., பாலச்சந்திரனுக்கு வழங்கப்பட்டது. இவர், உதவி சப்இன்ஸ்பெக்டராக இருந்தபோது, இருவர் கொலை வழக்கில் 48 மணி நேரத்திற்குள் குற்றவாளிகளை கைது செய்தார். இவ்வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தந்தார்.

இதேபோல் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகனுக்கு 2022ம் ஆண்டிற்கான ஜனாதிபதி காவல் பதக்கம் வழங்கப்பட்டது. அவரின் 36 ஆண்டு கால காவல் துறை பணியை பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டது. அவர் எஸ்.ஆர்.ஆர்.ஒ., அலுவலகத்தில் பணிபுரிந்தபோது போலி ஆவணங்களை கண்டு பிடித்து வெளிநாடு புலம் பெயர்தலை தடுத்து நிறுத்தி, அதிகாரிகளின் பாராட்டை பெற்றார்.

ஒய்வு பெற்ற சிறப்பு நிலை உதவி சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராஜ் கோதண்டபாணிக்கு 2022ம் ஆண்டு ஜனாதிபதி காவல் பதக்கம் வழங்கப்பட்டது. 2004ம் ஆண்டு கனாமி, 2019ம் ஆண்டு கொரோனா காலங்களில் சிறப்பாக பணியாற்றினார்.

உதவி சப்இன்ஸ்பெக்டர் காவல் பதக்கம்

சிறந்த பணிக்காக வழங்கப்படும் மத்திய உள்துறை அமைச்சரின் காவல் பதக்கம் நெடுங்காடு சப் இன்ஸ்பெக்டர் ராஜனுக்கு வழங்கப்பட்டது. 2021ம் ஆண்டு வில்லியனூர் காவல் நிலையத்தில் பணி புரிந்தபோது, திருட்டு வழக்கில் ரூ. 33.5 லட்சம் பொருட்களை மீட்டு, குற்றவாளிகளை நிரூபிக்க செய்தார்.

கவர்னர் காவல் பதக்கம்

காவல் துறையில் சிறந்த பணிக்கான வழங்கப்பட்டு வரும் கவர்னரின் காவல் பதக்கம் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு எஸ்.பி., ர்சனா சிங்கிற்கு வழங்கப்பட்டது. 2017ல் நடுக்கடலில் சிக்கிய 18 பாகிஸ்தான் மீனவர்களை காப்பாற்றுவதில் முக்கிய பங்காற்றினார். 2018ல் முதல்வர் நாராயணசாமி முதலாக மகளிர் காவலர் விளையாட்டு நடத்தி முக்கிய பங்கு வகித்தார்.

இதேபோல் காவல் துறையின் இலக்குகளை சிறப்பாக செயல்படுத்தி, குற்றவாளிகளை கைது செய்தல், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருதல் உள்ளிட்ட பணிகளை சிறப்பாக செய்ததற்காக 10 காவலர்களுக்கு கவர்னர் பதக்கம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு நாளை காவல் துறை சேவை நிலையு சூப்பட்டு கவுரவிக்கப்பட்டனர்.



சிறந்த சேவைக்கான குடியரசு தலைவரின் காவலர் விருது

குடியரசு தினவிழாவில் ஒய்வு பெற்ற சிறப்பு துணை உதவி ஆய்வாளர் கோதண்டபாணிக்கு கவர்னர் தமிழிசை விருது வழங்கினார்.

புதுச்சேரி, ஜன. 27: புதுச்சேரி காவல் துறையில் 1990ம் ஆண்டு கோதண்டபாணி காவலராக பணியில் சேர்ந்தார். கடந்த 2004ம் ஆண்டு முதல் வியாழ்பேட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 21 ரவுடிகள் சம்பந்தப்பட்ட கொலை வழக்கில் குற்றவாளிகளை கைது செய்யவும் வழக்கு பொருட்களை மீட்கவும் விசாரணை அதிகாரிக்கு உறுதுணையாக இருந்தார். 2018ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று ராஜீவ் காந்தி காவல் பதக்கமும், 10 திறந்த சேவைக்கான சான்றிதழ்களும் மற்றும் 5 பண வெகுமதிகளும் பெற்றுள்ளார்.

இவரது சிறந்த சேவையை பாராட்டி 2022ம் ஆண்டு குடியரசு தின தினத்தில் குடியரசு தலைவரின் காவல் பதக்கம் விருது அவருக்கு அறிவிக்கப்பட்டது. இதனை நேற்று புதுச்சேரி கடற்கரை சாலையில் நடந்த குடியரசு தின விழாவில் கவர்னர் தமிழிசை ஓய்வு பெற்ற சிறப்பு நிலை துணை உதவி ஆய்வாளர் கோதண்டபாணிக்கு வழங்கி கவுரவித்தார்.

தடையை மீறி விற்ற மதுபானங்கள் பறிமுதல்

கலால் துறை அதிரடி



▶ புதுச்சேரியில் தடை உத்தரவை மீறி விற்பனை செய்யப்பட்ட மதுபானங்களை கலால் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

புதுச்சேரி, ஜன. 26: புதுச்சேரியில் வள்ளலார் தினத்தை முன்னிட்டு அனைத்து மதுபான கடைகள், சாராய கடைகள் மற்றும் கள்ளுக்கடைகளை மூட வேண்டும் என கலால் துறை உத்தரவிட்டது. இந்நிலையில் இதனை மீறி கள்ளத்தனமாக மதுபானங்கள் விற்பனை செய்பவர்களை பிடிக்க கலால் துறை துணை ஆணையர் மேத்யூ பிரான்சிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். அதன்படி தாசில்தார் சிலம்பரசன், துணை தாசில்தார்கள் சம்பத், சிவசங்கர் தலைமையில் 3 பறக்கும் படை அமைத்து புதுச்சேரி நகராட்சி, உழவர்கரை நகராட்சி, அரியாங்குப்பம், வில்லியனூர், மண்ணாடிப்பட்டு, பாகூர் மற்றும் நெட்டப்பாக்கம் கொம்யூன் பகுதி முழுவதும் தீவிரமாக சோதனை செய்து வந்தனர்.

இந்த சோதனையின் போது நேற்று காலாப்பட்டு, பத்துக்கண்ணு, அரியூர், க.ஆண்டியார் பாளையம், அரசூர், மங்களம் போன்ற பகுதியில் கள்ளத்தனமாக மதுபானங்களை விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து பறக்கும் படையினர் அதிரடியாக சென்று கள்ளத்தனமாக மது விற்பனை செய்த 12 லிட்டர் சாராயம், 19 லிட்டர் மதுபானங்களை பறிமுதல் செய்தனர்.

இவைகளின் மதிப்பு ரூ.11 ஆயிரத்து 997 ஆகும்.

மேலும் அவர்களுக்கு அபராதமாக ரூ.5 ஆயிரம் விதிக்கப்பட்டது. பிறகு தடையை மீறி மதுபானம் விற்பனை செய்த நபர்கள் மீது கலால் விதிகளின்படி வழக்குப்பதிவு செய்தனர்.

துணை ஜனாதிபதி வருகை: டி.ஜி.பி., ஆலோசனை



■ புதுச்சேரிக்கு துணை ஜனாதிபதி வருகையொட்டி, காவல்துறை தலைமையகத்தில் போலீஸ் டி.ஜி.பி., ஸ்ரீனிவாஸ் தலைமையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடந்தது.

புதுச்சேரி, ஜன. 26– புதுச்சேரிக்கு துணை ஜனாதிபதி வருகையையொட்டி, காவல்துறை தலைமையகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடந்தது.

போலீஸ் டி.ஜி.பி.ஸ்ரீனிவாஸ் தலைமை தாங்கினார். டி.ஐ.ஜி. பிரிஜேந்திரகுமார், சீனியர் போலீஸ் சூப்பிரண்டுகள் நாராசைதன்யா, சுவாதி சிங், போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் புதுச்சேரிக்கு 26ம் தேதி துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர் வருகையொட்டி, விமான நிலையம், காலாப்பட்டு மத்திய பல்கலைக்கழகம், தங்குமிடம் ஆகிய இடங்களில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும்.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிகைகள் எடுக்க வேண்டும். மாநில எல்லைகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபடவும், கடலோர பகுதிகள், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட இடங்களில் சோதனை நடத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

Pondy police recover ₹1.36 cr lost in nine online fraud cases

EXPRESS NEWS SERVICE @ Puducherry



Cyber Crime SP S Bascarane issues demand draft to a cyber fraud victim | EXPRESS

THE Cyber Crime wing in Puducherry successfully retrieved ₹1.36 crore lost in nine online fraud cases and distributed it to the victims on Monday. The police also handed over 70 missing or stolen phones which they had recovered at the Cyber Crime Police Station in Gorimedu.

Speaking to media persons, Cyber Crime SP S Bascarane said, "Under the leadership of DGP B Shrinivasan and Deputy IG Brijendra Kumar Yadav, our team investigated nine online scam cases. Over the past one and half months, ₹1.36 crore of funds were recovered and returned to the victims through court procedures. In one case, ₹52 lakh was reclaimed from twenty-three accounts linked to the perpetrator and froze all following the complaint. This year, we've received 255 complaints, totalling ₹5.37 crore in losses due to online fraud."

Similarly, 70 mobile phones, worth ₹15 lakh, were also recovered and handed back to their owners on Monday, he added.

SP Bascarane also cautioned the public about two emerging scams-- fraudulent transactions through the Aadhaar Enabled Payment System (AePS) and perpetrators posing as police officials and threatening individuals with fake courier parcels containing prohibited items.

"Thanks to the concerted efforts of DGP, Standard Operating Procedures (SOP) for Cyber Crime have been implemented in Puducherry, making it one of the few states and the first in the Union Territory. Ten fraudulent websites were shut down based on complaints and our team's actions," Bascaranen added.

பெண்களுக்கு அச்சுறுத்தல் எதிரொலி:

பஸ் நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பு

செல்போன் எண்ணை கொடுத்து புகார் தெரிவிக்க அறிவுறுத்தல்

திருநள்ளாறு, டி.ச.7– பெண்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக எழுந்த புகாரை தொடர்ந்து பஸ் நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

போதை ஆசாமிகளால் அச்சுறுத்தல்

காரைக்கால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பெண்கள் சம்பந்தமான குறை கேட்பு கூட்டம் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

இந்தகூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் பலர், காரைக்காலில் இருந்து கிராமப்புறங்களுக்கு இரவு 8 மணிக்கு மேல் குறைந்த அளவிலேயே பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதனால் கடைகள், வர்த்தக நிறுவனங்களில் கிராமப்புறங்களில் இருந்து வேலை செய்யும் பெண்கள் மற்றும் டியூசன் முடித்து விட்டு வரும் கிராமப்புற மாணவிகள் பஸ்சுக்காக நீண்டநேரம் காத்திருக்கும் நிலை உள்ளது. அப்போது போதை ஆசாமிகள் மற்றும் மர்மநபர்களால் அச்சுறுத்தல் இருப்பதாகவும், இதை தடுக்க வேண்டும் என்றும் முறையிட்டனர்.

போலீசார் கண்காணிப்பு

இதைத்தொடர்ந்து காரைக்கால் பஸ் நிலையத்தில் இரவு முழுவதும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்று சீனியர் போலீஸ் சூப்பிரண்டு உத்தரவிட்டார். அதன்பேரில் காரைக்கால் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் தலைமையில் போலீசார் நேற்று பஸ் நிலையத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.



காரைக்கால் பஸ் நிலையத்தில் பெண்கள் பாதுகாப்பு குறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் புருஷோத்தமன் கண்காணிப்பில் ஈடுபட்டார்.

இடமான நபர்களை பிடித்து விசாரித்தனர். கிராமப்புறங்களுக்கு செல்லும் பஸ்களில் இருந்த பெண்களிடம் குறைகளை கேட்டனர். ஏதேனும் அச்சுறுத்தல், மிரட்டல் இருந்தால் புகார் தெரிவிக்குமாறு போலீசார் செல்போன் எண்ணை கொடுத்தார். அக்கு

எண்ணில் எந்தநேரம் வேண்டுமானாலும் புகார் தெரிவிக்கலாம், புகார் தெரிவித்தவர்கள் விவரம் ரகசியம் காக்கப்படும் என்றும் கூறினார். மேலும் பஸ்சில் போலீசின் செல்போன் எண்ணை ஒட்டுமாறு டிரைவர், கண்டக்டர்களிடம் அறிவுறுத்தினார்.



■ ராஜிவ்காந்தி சிக்னலில் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்த புதிதா அமைக்கப்பட்ட ஒலிபெருக்கியை போக்குவரத்து சீனியர் எஸ்.பி., பிரவீன் குமா திரிபாதி இயக்கிவைத்து பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார். அருகி எஸ்.பி., செல்வம், இன்ஸ்பெக்டர் நாகராஜன்.



புதுவை ரெயில் நிலையத்தில் இருந்து விழுப்புரத்துக்கு சென்ற ரெயிலில் பயணிகளின் உடமைகளை போலீசார் சோதனை செய்த போது எடுத்த படம்.

குடியரசு தினவிழாவை முன்னிட்டு

புதுவையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

ரெயில், பஸ் நிலையங்களில் போலீஸ் கண்காணிப்பு

புதுச்சேரி, ஜன.25- புதுச்சேரியில் குடியரசு தினத்தையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகம் கூடும் ரெயில், பஸ் நிலையங்களில் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பலத்த பாதுகாப்பு

நாடு முழுவதும் குடியரசு தினவிழா நாளை (வெள்ளிக்கிழமை) கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி புதுச்சேரியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

புதுவை போலீஸ் டி.ஜி.பி. ஸ்ரீனிவாஸ் உத்தரவின்பேரில் மாநில எல்லைகளான கோரிமேடு, தனகச்செட்டிக்குளம், மதகடிப்பட்டு, கன்னியக்கோவில் பகுதியில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். புதுவைக்கு வரும் அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்கு பிறகே நகருக்குள் அனுமதிக்கப்படுகிறது.

தங்கும் விடுதியில் சோதனை

இதேபோல் புதுவையில் உள்ள தங்கும் விடுதிகளில் போலீசார் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர். அப்போது அறைகளில் தங்கி இருப்பவர்களின் விவரங்களை கேட்டனர். சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் யாரேனும் தங்கினால் உடனடியாக போலீசுக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டனர்.

புதுச்சேரி ரெயில் நிலையத்தில் ரெயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சரவணன் மற்றும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வெளிமாநிலங்களில் இருந்து ரெயிலில் புதுவைக்கு வந்த பயணிகளின் உடமைகளை சோதனையிட்டனர்.

மேலும் புதுவை புதிய பஸ் நிலையம் மற்றும் பொதுமக்கள் அதிக கூடும் இடங்களான கடற்கரை, பூங்காக்கள், கோவில்கள், தேவாலயங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ளூர் போலீசார் தீவிரமாக கண்காணித்து

கடற்கரை சாலையில் நாளை

கவர்னர் தமிழிசை தேசியக்கொடி ஏற்றுகிறார்



குடியரசு தினத்தையொட்டி புதுச்சேரி கடற்கரை சாலையில் கமாண்டோ படையினர் இறுதி ஒத்திகையில் ஈடுபட்டனர்.

டிஜிபி தலைமையில் இறுதி ஒத்திகை

புதுச்சேரி, ஜன. 25: புதுவை கடற்கரையில் 26ம் தேதி நடைபெறும் குடியரசு தின விழாவின் போது கவர்னர் தமிழிசை தேசியக் கொடி ஏற்றுகிறார். இதையொட்டி டிஜிபி ஸ்ரீநிவாஸ் தலைமையில் இறுதி ஒத்திகை நடைபெற்ற நிலையில் மாநிலம் முழுவதும் உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் குடியரசு தினவிழா நாளை (26ம்தேதி) உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. புதுச்சேரி கடற்கரை காந்தி சிலை முன்பு நடைபெறும் விழாவில் பங்கேற்க கவர்னர் தமிழிசை காலை 10.30க்கு வருகிறார். அவரை தலைமை செயலர் ராஜீவ் வர்மா, டிஜிபி ஸ்ரீனிவாஸ் ஆகியோர் வரவேற்கின்றனர். பின்னர் மேடைக்கு வரும் கவர்னர் தமிழிசை, தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்துகிறார். அப்போது போலீஸ் பேண்டு வாத்திய குழுவினர் தேசியக்கீதம் இசைக்கின்றனர்.

தொடர்ந்து பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு சான்றிதழ்கள், விருதுகள் வழங்கப்படுகிறது. பின்னர் காவல் துறை, தேசிய மாணவர் படை மாணவ- மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார். தொடர்ந்து அரசுத் துறைகளில் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு நடக்கிறது. பின்னர் தேசியகீதம் இசைக்கப்பட்டு விழா நிறைவடைகிறது. இவ்விழாவில் முதல்வர் ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

கடற்கரை சாலையில் விழா முடிந்ததும் நேராக சட்டசபை வளாகத்துக்கு வரும் முதல்வர் ரங்கசாமி, சட்டசபையில் தேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத்துகிறார். மேலும் காவல்துறையினரின் மரியாதையை ஏற்றுக் கொள்கிறார். குடியரசு தினவிழாவையொட்டி மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளன. ராஜ்நிவாஸ், சட்டசபை, தலைமை செயலகம் உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்கள் அலங்கார மின் விளக்குகளால் ஜொலிக்கிறது.

முன்னதாக குடியரசு தினவிழாவுக்கான இறுதி அணிவகுப்பு ஒத்திகை நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. டிஜிபி ஸ்ரீனிவாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த ஒத்திகையின்போது காவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டன. 4 பிராந்தியங்களிலும் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமையில் காரைக்கால் ரெயில் நிலையத்தில் பயணிகளின் உடமைகளை போலீசார் சோதனை செய்த காட்சி.

பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு

ரெயில், பஸ் நிலையங்களில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு திடீர் ஆய்வு

திருநள்ளாறு, டிச.6- பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு ரெயில், பஸ் நிலையங்களில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு திடீர் ஆய்வு செய்தார்.

பாபர் மசூதி இடிப்பு தினம்

ஆண்டுதோறும் டிசம்பர் 6-ந் தேதி நாடு முழுவதும் பாபர் மசூதி இடிப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் போலீசார் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

அந்த வகையில் காரைக்கால் ரெயில் நிலையம், பஸ் நிலையம் உள்பட மக்கள் கூடும் இடங்களில் நேற்று சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமையில் போலீசார் தீவிர சோதனை செய்தனர். காரைக்கால் ரெயில் நிலையத்துக்கு வந்த வேளாங்கண்ணி பயணிகள் ரெயிலில் போலீசார் ஏறி, பயணிகளின் உடமைகளை சோதனை செய்தனர்.

தீவிர சோதனை

மேலும் மோப்ப நாய் ஜாக் மற்றும் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் வெடிகுண்டுகள் ஏதேனும் புதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என்று சோதனை செய்யப்பட்டது. இதேபோ பஸ் நிலையத்திலும் தீவ சோதனை நடந்தது. அ போது சந்தேக நபர்கள பிடித்து போலீசார் வி ரித்து, அவர்களின் முக ரியை வாங்கிக்கொண் அனுப்பி வைத்தனர். மேலு தங்கும் விடுதிகளிலு சோதனை நடத்தப்பட்ட கோவில்கள், பள்ளி வாச தேவாலயங்களில் போலீச தீவிரமாக கண்காணித்து வ கின்றனர்.

இந்த சோதனையி மாவட்ட போலீஸ் சூப் ரண்டு சுப்ரமணியன், இன் பெக்டர்கள் பிரவீன், பு ஷோத்தமன் மற்றும் போ சார் உடனிருந்தனர்.



போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி

வாகன ஓட்டிகளுக்கு இலவச ஹெல்மெட்

புதுச்சேரி, டிச.27- புதுச்சேரியில் வருகிற ஜனவரி 1-ந் தேதி முதல் இருசக்கர வாகனங்களில் செல்வோர் கட்டாயமாக ஹெல்மெட் அணிய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தி புதுச்சேரி போக்குவரத்து போலீசார் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி அண்ணா சிலை அருகே நேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புதுச்சேரி போக்குவரத்து சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பிரவீன் குமார் திரிபாதி தலைமை தாங்கினார். போலீஸ் சூப்பிரண்டுகள் செல்வம், மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியையொட்டி அந்த வழியாக வந்த இருசக்கர வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்து தொடர்பான கேள்விகள் கேட்டு சரியான பதில் அளித்தவர்களுக்கு இலவசமாக ஹெல்மெட்டை சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பிரவீன் குமார் திரிபாதி வழங்கினார். நிகழ்ச்சியில் போக்குவரத்து இன்ஸ்பெக்டர்கள் நாகராஜ், கோபாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் 50-க்கும் மேற்பட்டோருக்கு ஹெல்மெட் வழங்கப்பட்டது.

கார் பார்க்கிங் குறித்து தெரிந்து கொள்ள

புதுவையில் சுற்றுலா பயணிகளுக்கு 'கியூஆர்' கோடு வசதி

போக்குவரத்து போலீசார் நடவடிக்கை



புதுச்சேரி, டிச.27- புதுச்சேரியில் கார் பார்க்கிங் வசதியை தெரிந்து கொள்ள சுற்றுலா பயணிகளுக்கு 'கியூஆர்' கோடு வசதியை போக்குவரத்து போலீசார் செய்துள்ளனர்.

புத்தாண்டு கொண்டாட்டம்

புதுச்சேரியில் ஆண்டு தோறும் ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம் கோலாகலமாக கொண்டாடப்படும். அதன்படி 2025-ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாடுங்களுக்கு 4 நாட்களே உள்ளது. இதற்காக தற்போது இருந்தே சுற்றுலா பயணிகள் படையெடுக்க தொடங்கியுள்ளனர். சுற்றுலா பயணிகள் வருகையால் நகரும் விடுதிகள் நிரம்பி வழிகின்றன. நகரில் பிரதான சாலைகளில் வெளிமாநில பதிவெண் கொண்ட வாகனங்கள் அதிகளவில் உலா வருகின்றன.

இதற்கிடையே புதுவைக்கு வரும் வெளிமாநில சுற்றுலா பயணிகள் தங்களின் வாகனங்களை எங்கு பார்க்கிங் செய்வது என்று தெரியாமல் செல்வம், மோகன்குமார், போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜ் ஆகியோர் பார்க்கிங் வசதி குறித்து கியூஆர் கோடு அடங்கிய அட்டையை வழங்கினர்.

புத்தாண்டு பண்டிகையை யொட்டி முதன் நாளான 31-ந் தேதியன்று புதுச்சேரியில் இந்திரா காந்தி விளையாட்டு மைதானம், உப்பளம் புதிய துறைமுக வளாகம், சின் மகளிர் கல்லூரி உள்பட 10 இடங்களில் வாகன பார்க்கிங் வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பார்க்கிங் இடங்களை அறியும் வகையில் தனி 'கியூ ஆர்' வழிகாட்டி அட்டையை போக்குவரத்து போலீசார் வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாகன ஒட்டிகளுக்கு கார் பார்க்கிங் குறித்து கியூஆர் கோடு மூலம் போக்குவரத்து சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பிரவீன்குமார் திரிபாதி விழிப்புணர்வு ஏற்படுத்திய காட்சி.



கோரிமேடு போலீஸ் மைதானம் அருகில் உள்ள போலீஸ் நலச்சங்க ஷில்பி ஷாப்பில் பட்டாசு விற்பனையை எஸ்.பி., ரங்கநாதன் துவக்கி வைத்தார்.

பட்டாசு விற்கும் புதுச்சேரி போலீஸ்

பொதுமக்களும் வாங்கலாம்

புதுச்சேரி, அக். 28- ரூ. 2000 மதிப்புள்ள பட்

புத்தாண்டு பாதுகாப்பு பணியில் 3000 போலீசார்

குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படும் போலீசார் மீது கடும் நடவடிக்கை

30 சிறப்பு பேருந்துகள் இயக்கம் — டிஜிபி தகவல்



▶ கிறிஸ்துமஸ், புத்தாண்டை முன்னிட்டு புதுச்சேரியில் நடந்த அனைத்து பார் உரிமையாளர்கள், ஓட்டல் உரிமையாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் டிஜிபி சத்தியசுந்தரம் பேசினார்.

புதுச்சேரி, டிச. 26: புதுச்சேரி காவல் துறை சார்பில் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு அனைத்து பார் உரிமையாளர்கள், ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோருடன் ஆலோசனை கூட்டம் தனியார் ஓட்டலில் நடந்தது. டிஜிபி சத்திய சுந்தரம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். சீனியர் எஸ்பிக்கள் வாணன் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் பார் மற்றும் ஓட்டல் உரிமையாளர்கள் கலந்து கொண்டு பேசுகையில், ரவுடிகள் மாமூல் கேட்டு மிரட்டுவதாகவும், சில நேரங்களில் ஊழியர்களை தாக்குவதாகவும் அவர்களது குறைகளை தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து டிஜிபி சத்தியசுந்தரம் பேசுகையில், புத்தாண்டை கொண்டாட ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது நமது கடமை. அதையும் பார். ஓட்டல்களில் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். சிடிவி கேமராக்களை உள்ளே மற்றும் வெளியே பொருத்த வேண்டும். விரைவில் பார்க்கிங் இலவச கோடு அனைத்து பொது இடங்களிலும் பொருத்தப்படும். பாதுகாப்பு பணியில் சட்டம் ஒழுங்கு, போக்குவரத்து போலீசார் என மொத்தம் 3000 போலீசார் ஈடுபடவுள்ளனர்.

வாகனங்கள் பார்க்கிங் இடத்தில் இருந்து நிகழ்ச்சி நடக்கும் இடங்கள் மற்றும் சுற்றுலா இடங்களுக்கு செல்ல 30 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை மற்றும் ரவுடிகள் மாமூல் பிரச்னை போதை பொருள் பயன்படுத்துதல் போன்றவை என்றால் அருகில் உள்ள காவல் நிலையம், 112 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளுங்கள். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்டால் உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துங்கள். நடவடிக்கை எடுக்காத போலீசார் மீது தகுந்த கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.



கைது செய்யப்பட்ட 2 பேரையும், அவர்களை பிடித்த போலீசாரையும் படத்தில் காணலாம்.

திருக்கனூர் அருகே

கோவில் பூட்டை உடைத்து பித்தளை பொருட்கள் திருட்டு

2 பேர் கைது

திருக்கனூர், டிச.27- திருக்கனூர் அருகே கோவில் பூட்டை உடைத்து பித்தளை பொருட்களை திருடிய 2 பேர் கைது செய்தனர்.

அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில்

திருக்கனூர் அருகே விநாயகம்பட்டு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. நேற்று முன்தினம் இரவு கோவில் பூட்டை உடைத்து உள்ளே புகுந்த மர்மநபர் கோவிலில் இருந்த பித்தளை தவளை, அண்டா, சொம்பு உள்ளிட்ட பொருட்களை திருடி சென்றனர்.

இதுகுறித்து கோவில் நிர்வாகத்தினர் திருக்கனூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதன்பேரில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பிரியா வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

இந்த நிலையில் நேற்று திருக்கனூர் போலீசார் சோரப்பட்டு ஏரிக்கரை பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஒருவர் போலீசாரை கண்டதும் ஓட்டம் பிடித்தனர். சந்தேகம் அடைந்த போலீசார் அந்த நபரை பிடித்து விசாரணை நடத்தினர்.

2 பேர் கைது

விசாரணையில் அவர், கடலூர் மாவட்டம் கூத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த சேகர் (வயது 50) என்பதும், சோரப்பட்டில் உள்ள ஒரு செங்கல் சூளையில் தங்கியிருந்து தொழிலாளியாக வேலை பார்த்து வந்ததும் தெரியவந்தது. மேலும் விநாயகம்பட்டு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலின் பூட்டை உடைத்து பித்தளை பொருட்களை திருடியதை ஒப்புக் கொண்டார். இதையடுத்து அவரை கைது செய்தனர்.

மழைக்காலம் என்பதால் செங்கல் சூளையில் வேலை இல்லாததால் குடிப்பதற்காக திருடியதாகவும், அதனை திருக்கனூர் அடுத்த கலித்திரம்பட்டில் உள்ள ஒருவரிடம் இரும்பு கடையில் விற்பனை செய்ததாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவரையும் கைது செய்த போலீசார் பொருட்களையும் பறிமுதல்



போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா ஆய்வு செய்தபோது எடுத்த படம்.

போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் திடீர் ஆய்வு:

இருசக்கர வாகனம் ஓட்டும் சிறுவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

சீனியர் போலீஸ் சூப்பிரண்டு உத்தரவு

திருநள்ளாறு, டிச.25- இருசக்கர வாகனம் ஓட்டும் சிறுவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து போலீசாருக்கு சீனியர் போலீஸ் சூப்பிரண்டு உத்தரவிட்டார்.

திடீர் ஆய்வு

காரைக்கால் மாவட்டத்தில் சனிக்கிழமை தோறும் பொது மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தை காவல்துறை சார்பாக நடைபெற்று வருகிறது அதன் ஒரு பகுதியாக கடந்த சனிக் கிழமை நடந்த கூட்டத்தில் சிறுவர்கள் வாகனம் ஓட்டுவ தாகவும், இதனால் விபத்து அபாயம் உள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் போக்குவ ரத்து போலீஸ் நிலையத்தில் நேற்று மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப் போது வழக்கு மற்றும் அபரா தம் விதிக்கப்பட்ட பதிவேடு கள், ஆவணங்களை பார்வை யிட்டார். இதனை முறையாக பராமரிக்க அறிவுறுத்தினார்.

நடவடிக்கை எடுக்கவேண்டும்

வாகனம் ஓட்டும் சிறுவர் கள் மீது வழக்குப்பதிவு செய் யப்பட்டுள்ளதா? என்று கேட்டு அறிந்தார். இனிவரும் காலங்களில் இருசக்கர வாக னம் ஓட்டும் சிறுவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு போலீசாருக்கு உத்தரவிட் டார். மேலும் ஹெல்மெட் கட்டாயம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கூறினார்.

ஆய்வின்போது மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுப்பி ரமணியன், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் லெவின் பாரதி ஆகியோர் உடனிருந்த னர்.



குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கிய டி.ஐ.ஜி.

திருநள்ளாறு, டிச.23- காரைக்கால் போலீஸ் தலைமை அலுவலகத்தில் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் புதுச் சேரி டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் கலந்து கொண்டு பொது மக்களிடம் குறைகளைகேட்டார். பின்னர் கூட் டம் முடிந்த பின் காரில் புதுச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்தார். கோவில்பத்து அருகே வந்தபோது அப்பகுதியில் நின்றிருந்த குழந்தைகள் அவரை பார்த்து மகிழ்ச்சியாக கைய சைத்தனர். உடனே டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் தனது வாகனத்தை நிறுத்தி கீழே இறங்கி வந்து குழந்தைகளுடன் கைகுலுக்கி பேசினார். அவர்களிடம் நீங்கள் படித்து என்ன வேலைக்கு செல்லபோகிறீர்கள்? என கேட்டார். அதற்கு குழந்தைகள் டாக்டர், கலெக் டர், பைலட் என ஆர்வத்துடன் பதில் கூறினர். அவர்களை பாராட்டி, டி.ஐ.ஜி. இனிப்பு வழங்கினார்.

புத்தாண்டு பாதுகாப்பு பணியில் 1,300 போலீசார்: டி.ஐ.ஜி., தகவல்

புதுச்சேரி, டிச. 24- கிறிஸ்துமஸ், புத் தாண்டு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடு கள் குறித்து வியாபாரிகள் மற்றும் வணிக சங்க நிர்வா கிகளுடன் போக்குவரத்து போலீசார் ஆலோசனை கூட்டம் நடந்தது.

அதில் ஓட்டலில் நடந்த கூட்டத்திற்கு ஐ.ஜி., அஜித் குமார் சிங்லா தலைமை தாங்கினார்.

டி.ஐ.ஜி., சத்தியசுந்த ரம் பேசுகையில், 'நகரின் முக்கிய பிரச்சனை ஆக்கிர மிப்பு மற்றும் பார்க்கிங். வியாபாரிகள் நடைபாதை, சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொள்ள வேண்டும். இன்று முதல் 24ம் தேதி முதல் 31ம் தேதி வரை ஒவ்வொ ருவரின் முழுமுயற்சியுடன் போக்குவரத்து ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளது. புத்தாண்டு பாதுகாப்பு பணியில் 1,000 போலீ சார் மற்றும் 300 டிராபிக் போலீசார் ஈடுபடுவர். பொதுமக்கள் பாதுகாப்பு கருதி தொரிசலை குறைக்க இதுக்கப்படாமல் உள்ள பதிவு பேருந்து நிலையம் உள்ளிட்ட 10 பார்க்கிங் இடங்களை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. தற்காலிக கடைகளை ஆக் ரமிக்க கூடாது. இந்த விஷயத்தில் தகராறில் ஈடுபடுவோர் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும். பொது கடலில் நடக்கும் உயிர்பழப்புக்களை தடுக்க கடலோர காவல்படை வீரர்கள் ரோந்து படகு மற்றும் டிரோன் மூலம் கண்கா ணிக்கும் பணி நடக்கும். 10 இடங்களில் பார்க்கிங் வசதி செய்யப்படும். கூடு தல் பல்கள் மூலம் பார்க் கிங் இடத்தில் இருந்து நகர பகுதிக்கு கற்றுலா பயண கள் அழைத்து செல்ல ஏற் பாடு செய்யப்படும்' என் றார். நிகழ்ச்சியில் சீனியர் எஸ்.பி., பிரவீன்குமார் நிரிபாதி, எஸ்.பி., செல் வம், இன்ஸ்பெக்டர் நாக ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியில், கிறிஸ்துமஸ் புத்தாண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரி ஓட்டலில் வியாபாரிகளுடன் நடந்த ஆலோசனை கூட்டத்தில், ஐ.ஜி., அஜித்குமார் சிங்லா பேசினார்.

புத்தாண்டு நினைத்தன்று

போக்குவரத்து நெரிசலை குறைக்க 10 பார்க்கிங் இடங்கள்

30 இலவச பேருந்துகளுக்கு ஏற்பாடு – டிஐஜி தகவல்



கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி புதுச்சேரியில் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் ஐஜி அஜித்குமார் சிங்லா பேசினார். அருகில் டிஐஜி சத்திய சுந்தரம்.

புதுச்சேரி, டிச. 24: கிறிஸ்து மஸ், புத்தாண்டு கொண் டாட்டத்தை யொட்டி பாதுகாப்பு மற்றும் போக் குவரத்து ஏற்பாடுகள் குறித்து வியாபாரிகள், வணிக சங்கத்தினர் உடன் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. ஐஜி அஜித்குமார் சிங்லா தலைமை தாங்கி பேசினார். டிஐஜி சத்தியசுந்த ரம் முன்னிலை வகித்து வியாபாரிகள் கொரிக் கைகள் குறித்து கேட்டு நிந்தார். பின்னர் அவர் பேசியதாவது:

காவல்துறையில் சூப் கள் பற்றாக்குறையை போக்க 450 ஊர்க்காவல் படையினர் நேற்று செய் யப்பட்டு பணியில் வினை விரைவில் சேர்த்துக்கொள் னர். தற்போது பயிற்சியில் உள்ள அவர்களையும், அதுமட்டுமல்லாமல் பணியில் இருக்கும் போலீசாரையும் பயன்படுத்தி கொண்டாட்ட பணியில் 10 நாட்களுக்கு தற்காலிகமாக சஸ்பெண்ட் இருக்கிறோம். போக்குவ ரத்து தொரிசலை குறைக்க இதுக்கப்படாமல் உள்ள பதிவு பேருந்து நிலையம் உள்ளிட்ட 10 பார்க்கிங் இடங்களை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. தற்காலிக கடைகளை ஆக் ரமிக்க கூடாது. இந்த விஷயத்தில் தகராறில் ஈடுபடுவோர் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கப்படும். கடற்கரைக்கு வரும் செல்ல சுற்றுலா பேருந்துகள் 30 இலவச பேருந்துகள் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து நடவடிக்கைகளும் முறை யில் பதிதான்டை கொண் டாட அனைத்து நட வடிக்கைகள் எடுக்கப்பட் டு வருகிறது. ஜிரோ டாலரன்ஸ் முறையை நோக்கி இம் முதல் கட்டமாக ஹெல் மெட் சட்டம் அமலாக் கத்தப்படும். வாகன ஓட்டுவோர் ஹெல்மெட் அணிதிருக்க வேண்டும். பின்னால் அமர்ந்திருப் பவரும் அணிய வேண் டும். இதற்கு மொத்த காலம் அவகாசம் தரப்படும். அனைவரும் ஹெல்மெட் அணிந்து வாகனத்தை ஓட்டுவதை உறுதி செய்ய வேண்டும். இல்லாவிடில் அபராதம் விதிக்கப்படும். கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தி பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். இதற்கு மொத்த காலம் 30 நாட்கள் தரப்படும். அனைவரும் ஹெல்மெட் அணிந்து வாகனத்தை ஓட்டுவதை உறுதி செய்ய வேண்டும். இல்லாவிடில் அபராதம் விதிக்கப்படும். இதன் மூலம் சாலை விதிகளை மீறுவோர் மீது ஆட்டோமே டிக் முறையில் அபராதம் விதிக்கப்படும். இதன் மூலம் ஆட்கள் பற்றாக்குறை தீர்க்கப்படும் என்றார்.

சாலை விதிகளை மீறினால் ஆட்டோமேடிக் அபராதம்

டிஐஜி பேச்சுவார்த்தை நடத்தினார்



காலைக்காலில் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்த காட்சி

போதைப்பொருள் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

டி.ஐ.ஜி.சத்தியசுந்தரம் எச்சரிக்கை

இருளன்ஞாறு, டிச.22-
காலைக்காலில்போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று டி.ஐ.ஜி சத்திய சுந்தரம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறைதீர் முகாம்

காரைக்காலில் போலீஸ் துறை சார்பில் பொதுமக்களிடம் குறைதீர் கூட்டம் நடத்தப்படும் என புதுச்சேரி டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் அறிவித்திருந்தார். இதன்படி காரைக்கால் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நேற்று காலை 10 மணிக்கு குறைதீர் முகாம் நடைபெற்றது. இதில் டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் தலைமை தாங்கினார். சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா, சூப்பிரண்டுகள் கபிரமணியன், பாலச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளை கூறியதாவது:-

காரைக்கால் நகரப் பகுதியை அடுத்த புதுக்கிலேரியில் மாலை வேளையில் குறிப்பிட்ட இடத்தில் சிலர் மது அருந்துவதால் அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் அச்சமடைகின்றனர். எனவே அங்கு போலீஸ் ரோந்து பணியை அதிகரிக்க வேண்டும்.

இதற்கு பதிலளித்த போலீஸ் அதிகாரிகள், அந்த பகுதியில் ரோந்து பணியை அதிகரிக்கப்படும் என்று உறுதியளித்தனர்.

ராதிபேதம்

சமூகவலைதளங்களில் பதிவிடப்படும் சாதி, மத ரீதியிலான மோதல், தனி நபர் குறித்த விமர்சனங்களை கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காரைக்காலில் மணல் வாரவேண்டாம் நகரக் குள வரம்பில் புதுமதிச்சாலை வழியாக இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சாலை களில் கண்காணிப்பு கேமரா அமைக்க பொருத்தமான இடங்களை அதிகாரிகளே தேர்வு செய்ய வேண்டும். மாடு முட்டி இருசக்கர வாகனங்களில் உயிரிழப்பு ஏற்படாமல் இருக்க அதிகாரிகளே தேர்வு செய்ய வேண்டும். மாடு முட்டுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காரைக்காலில் பள்ளிகள் தொடங்கும் நேரம், முடியும் நேரத்தில் அனைத்து பள்ளி வாகனங்களும் போலீஸ் பாதுகாப்புடன் செல்ல வேண்டும். இரவு நேர ரோந்து பணியை தீவிரப்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியை விட தமிழை விரைவாக கற்கலாம்

காரைக்கால் போலீஸ் தலைமை அலுவலகத்தில் நடந்த குறைதீர் கூட்டத்தில் புதுச்சேரி டி.ஐ.ஜி. சத்தியசுந்தரம் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

புதுவையில் வெளிமாநிலங்களில் இருந்து வந்து போலீஸ் அதிகாரி களில் அதிகம் பணிபுரிவதற்கு தமிழ் மொழி தெரியாதது தான் காரணம். இந்தியை விட தமிழை விரைவாக கற்கலாம். தமிழ் மொழி தெரிந்தால் அனைத்து பள்ளி வாகனங்களிலும் போலீஸ் பாதுகாப்பு வழங்கப்படும். இதற்கு தனியாக பணம் செலுத்த வேண்டியதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



கோரிமேட்டில் ஐ.ஜி.அழித்குமார் சிங்லா, சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அனிதா ராய் ஆகியோர் குறைகேட்பு கூட்டம் நடந்த போது எடுத்த படம்.

பொதுமக்கள் குறைக்கேட்பு கூட்டம்:

104 புகார் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

புதுச்சேரி, டிச.22-
புதுச்சேரி மாநிலத்தில் நடந்த பொதுமக்கள் குறைக்கேட்பு கூட்டத்தில் 104 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது.

பொதுமக்கள் குறைகேட்பு கூட்டம்

புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலையங்களில் சனிக்கிழமை தோறும் பொதுமக்கள் குறைகேட்பு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி புதுவை, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் ஆகிய பிராந்தியங்களில் உள்ள போலீஸ் நிலையங்களில் குறைகேட்பு கூட்டம் நேற்று நடந்தது.

புதுவை அரியாங்குப்பம் போலீஸ் நிலையத்தில் நடந்த கூட்டத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கலைவாணன் கலந்துகொண்டு பொதுமக்களிடம் குறைகேட்டார். மொத்தம் 145 புகார் மனுக்கள் பெறப்பட்டன. இதில் 104 புகார்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது. நிலுவையில் உள்ள புகார்களுக்கு விரைவாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆயுதப்படை போலீசார்

புதுச்சேரி கோரிமேட்டில் ஆயுதப்படை போலீசார் குறை கேட்பு கூட்டம் காவல் துறை சமுதாய கூட்டத்தில் நேற்று நடந்தது. ஆயுதப்படை போலீஸ் சூப்பிரண்டு அனிதா ராய் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக போலீஸ் ஐ.ஜி அழித்குமார் சிங்லா கலந்து கொண்டார்.

கூட்டத்தில் ஆயுதப்படை போலீஸ்காரர்கள் மற்றும் காவலர் பயிற்சிப்பள்ளி பயிற்சி போலீசார் கலந்துகொண்டு தங்களின் குறைகளை தெரிவித்தனர். குறிப்பாக கடுமை, கழிவறை வசதி, பணியிட மாறுதல், வேலை நேரத்தை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தினர். இதேபோல் போலீஸ் இசைக்குழுவினர் தங்களுக்கான புதிய இசைக் கருவிகள் வாங்கித்தர வேண்டும் என்றனர். அவர்களுக்கு உடனடியாக புதிய இசைக் கருவிகள் வழங்கப்படுவதாக எடுக்க ஐ.ஜி. அழித்குமார் சிங்லா உத்தரவிட்டார்.

இதேபோல் கூட்டத்தில் ஆயுதப்படை போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் செந்தில்குமார், ஜெகதீஸ்வரன் ஆகியோர் உள்பட பலரும் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

விபத்துக்களை தடுக்க பேரிகார்டுகளில் ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டும் பணி தீவிரம்

• போக்குவரத்து போலீசார் நடவடிக்கை



புதுச்சேரி, டிச. 23: புதுச்சேரி வில் போக்குவரத்து தெரிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. இதனை கட்டுப்படுத்தும் விதமாக புதுச்சேரி போக்குவரத்து சீனியர் எஸ்பி லட்சுமி சௌஜன்யா ஐபிஎஸ் ஆலோசனையின் படி, ஏஎஸ்பி கோகுலகிருஷ்ணன் உத்தரவின்பேரில் மேற்கு போக்குவரத்து போலீ சார் பேரிகார்டுகளை பல்வேறு இடங்களில் கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு வில்லியனூர், ஆறு பாபாராவனம் நகரில் தலைக்கவசம் அணியாது வந்தவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வாகன ஓட்டுனர்களிடம் போக்குவரத்து சம்பந்தமாக கேள்விகள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. அப்போது சரியான பதில் அளித்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. இதனை சீனியர் எஸ்பி லட்சுமி சௌஜன்யா ஐபிஎஸ் பிரவீன்குமார் ஐபிஎஸ் ஆகியோர் வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்நிலையில் வாகன ஓட்டுனர்கள் வேகத்தை குறைப்பதற்காகவும், வாகனங்கள் எந்த வழியாக செல்ல வேண்டும் என்ற இசையை குறிப்பிடுவதற்கும், வாகன விபத்தை தவிர்க்கும் வகையிலும் பேரிகார்டுகளை வைத்துள்ளனர்.

இதனிடையே தனியார் நிறுவனம் ஒன்றிய ஊர் போக்குவரத்து போலீசார்களுக்கு புதிய பேரிகார்டுகள் வழங்கி யுள்ளது. இதனை முகப்பு பகுதிகளில் வைப்பதற்காக போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர். இந்த நிலையில் இரவு நேரங்களில் நடக்கும் விபத்தை தடுக்கவும், வாகனங்களுக்கு அபாய எச்சரிக்கை காண்பிக்கவும் போக்குவரத்து போலீசார் பேரிகார்டுகளில் ஒளிரும் ஸ்டிக்கர் ஒட்டும் பணியில் ஈடுபட்டனர்.



முதலியார்பேட்டை போலீஸ் நிலையத்தில் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் பொது மக்களிடம் குறைகளை கேட்டபோது எடுத்த படம்.

போலீஸ் நிலையங்களில் குறைகேட்பு கூட்டம்:

ஆன்லைன் மூலம் இழந்த ரூ.75 லட்சம் உரியவர்களிடம் ஒப்படைப்பு

புதுச்சேரி, டிச.8-
புதுச்சேரியில் ஆன்லைன் மூலம் இழந்த ரூ.75 லட்சத்தை பாதிக்கப்பட்டவர்களிடம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறைகேட்பு கூட்டம்

புதுச்சேரி காவல் போலீஸ் நிலையங்களில் சனிக்கிழமை தோறும் குறைகேட்பு கூட்டம் நடைபெறுவது வழக்கம். இதன்படி கடந்த வாரம் அனைத்து போலீஸ் நிலையங்களிலும் குறைகேட்பு கூட்டம் நடந்தது. இதில் பொதுமக்கள் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்தனர். இதனை கேட்டு போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

124 புகார்கள்

இதே போல் கோரிமேடு போலீஸ் நிலையத்தில் நடந்த குறைகேட்பு கூட்டத்தில் 124 புகார் மனுக்கள் பெறப்பட்டன. இதில் 81 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது.

ரூ.75 லட்சம் மீட்பு

புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு காவ்யா ஆகியோர் தலைமையில் பொதுமக்கள் குறைகேட்பு கூட்டம் நடந்தது. இதில் ஆன்லைன் மூலம் ஏமாற்றப்பட்டதாக புகார் கொடுத்தவர்களுக்கு ஆன்லைன் மூலம் இழந்த ரூ.75 லட்சம் மீட்கப்பட்டு பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் சைபர் கிரைம் போலீஸ் அதிகாரிகள் மற்றும் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர் திருடியதாக கைது செய்தவர்களையும், அவர்களை பிடித்த போலீசாரையும் படத்தில் காணலாம்.

வில்லியனூர் அருகே

தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர்கள் திருட்டு

ஊழியர் உள்பட 5 பேர் கைது

வில்லியனூர், டிச.21-
தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர்கள் திருடிய ஊழியர் உள்பட 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

கம்ப்யூட்டர்கள் திருட்டு

வில்லியனூர் அருகேகிராம பாகம் பாகர் சாலையில் மேனகேட் என்ற தனியார் கம்பெனி உள்ளது. இந்த கம்பெனியில் கடந்த மாதம் 9-ம் தேதி கள்ளிர

பாக்கத்தைச் சேர்ந்த இளையராஜன் (35), மேற்கு முராமங்கலத்தை சேர்ந்த அய்யப்பன் (28), அஜித் (26), செல்வராஜ்பாளை சேர்ந்த அருண்குமார் (23) ஆகியோர் திருடியது தெரியவந்தது. இதை யடுத்து முருகன் உள்பட 5 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 6 கம்ப்யூட்டர்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

பின்னர் அவர்கள் 5 பேரும் புதுவை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர். கைதான அய்யப்பன் இந்த கம்பெனியின் முன்னாள் ஊழியர் என்பது

காமன்வெல்த் போட்டியில் சீனியர் எஸ்பிக்கு தங்கம்



தென்னாப்பிரிக்காவில் நடந்த காமன்வெல்த் பவர் லிப்டிங் பெண்கள் பிரிவில் புதுச்சேரி சீனியர் எஸ்பி அனிதா ராய் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்றார். அதனை யொட்டி, அவர் கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

வலுவியனூரில

போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



வில்லியனூரில் நடந்த போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சீனியர் எஸ்.பி. பிரவின்குமார் திரிபாதி, எஸ்.பி. மோகன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி, டிச. 21: புதுச்சேரி வில்லியனூர் பைபாஸ் ரோடு சந்திப்பில் போக்குவரத்து காவல் துறை சார்பில் போக்குவரத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று மாலை நடந்தது. இதில் போக்குவரத்து சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில் கூறும் பொதுமக்களில் 20 பேருக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு போக்குவரத்து சீனியர் எஸ்.பி. பிரவின்குமார் திரிபாதி, எஸ்.பி. மோகன்குமார் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் கோகுலகிருஷ்ணன் மற்றும் போக்குவரத்து போலீசார் கலந்து கொண்டனர்.

மாகே கடற்கரையில் தூய்மை பணி



மாகே கடற்கரையில் தூய்மை பணியை கவர்னர் கைலாஷ்நாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

கவர்னர் கைலாஷ்நாதன் பங்கேற்பு

புதுச்சேரி, டிச. 19: புதுச்சேரி கவர்னர் கைலாஷ் நாதன் அரசு முறைப் பயணமாக இரண்டு நாள் மாஹே சென்றுள்ளார். இந்த பயணத்தில் நேற்று முன் தினம் பத்தக்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டார். தொடர்ந்து மண்டல நிர்வாக அதிகாரி மோகன் குமார் மாகே சுகாராட்சி ஆணையர் சத்தியேந்திர சிங் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிலையில் மாகே கடற்கரையில் தூய்மை பணியை கவர்னர் கைலாஷ் நாதன் நேற்று காலை தொடங்கி வைத்தார். தொடர்ந்து கண்ணூர் தூற்பாலையும், மாகேவில் பல்வேறு இடங்களில் நடந்துவரும் சாலை மேம்பாட்டுப் பணிகளையும் பார்வையிட்டார்.

போக்சோ வழக்கை வாபஸ் பெறக் கோரி தொல்லை

கோர்ட்டு வளாகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி

போலீசார் தடுத்து காப்பாற்றினர்

புதுச்சேரி, டிச.28- போக்சோ வழக்கை வாபஸ் பெறுமாறு தொல்லை கொடுத்ததால் புதுவை கோர்ட்டு வளாகத்தில் தீக்குளிக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது.

தீக்குளிக்க முயற்சி

பகுதியை சேர்ந்த 40 வயது பெண் ஒருவர் நேற்று காலை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்துக்கு வந்தார். திடீரென்று கேனில் இருந்த மண்ணெண்ணெயை சிறிது வாயில் ஊற்றிக் கொண்டதுடன், தனது தலையிலும் ஊற்றி தீக்குளிக்க முயன்றார். இதைப்பார்த்ததும் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மற்றும் எடுக்காததால் மண்ணெண்ணெயை ஊற்றி கோர்ட்டு வளாகத்தில் தீக்குளிக்க முயன்றதாகவும் தெரிவித்தார்.

மண்ணெண்ணெயை குடித்து இருந்ததால் அவரை சிகிச்சைக்காக புதுவை அரசு ஆஸ்பத்திரியில் போலீசார் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கோர்ட்டு வளாகத்தில் பெண் தீக்குளிக்க முயன்ற சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

வினாடி வினா கேள்வி கேட்டு ஹெல்மெட் பரிசு

போக்குவரத்து போலீசார் ஹெல்மெட் விழிப்புணர்வு



ஹெல்மெட் அணிவதை வலியுறுத்தி புதுச்சேரி அண்ணா சிலை அருகே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற வாகன ஓட்டிகளுக்கு சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி இலவசமாக ஹெல்மெட் வழங்கினார். அருகில் எஸ்.பி.க்கள் செல்வம், மோகன்குமார், இன்ஸ்பெக்டர் நாகராஜ்.

புதுச்சேரி, டிச. 27: புதுச்சேரியில் வருகிற ஜனவரி முதல் இருசக்கர வாகனங்களில் செல்வோர் கட்டாயமாக ஹெல் மெட் அணிய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனை வலியுறுத்தி புதுச்சேரி போக்குவரத்து போலீசார் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி அண்ணா சிலை அருகே நேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு புதுச்சேரி போக்குவரத்து சீனியர் எஸ்பி பிரவீன் குமார் திரிபாதி தலைமை தாங்கினார். இதில் போலீஸ் எஸ்பிக்கள் செல்வம், மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியை யொட்டி அந்த வழியாக வந்த இருசக்கர வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்து தொடர்பான வினாடி வினா கேள்விகள் கேட்டு சரியான பதில் அளித்த வர்களுக்கு இலவசமாக ஹெல்மெட் வழங்கினர். நிகழ்ச்சியில் போக்குவரத்து இன்ஸ்பெக்டர்கள் நாகராஜ், கோபால கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சுமார் 50க்கும் மேற்பட்டவருக்கு ஹெல்மெட் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து புத்தாண்டை யொட்டி அதிகளவில் வாகனங்கள் வருவதால் சுற்றுலா பயணிகள் தங்கள் வாகனங்களை பத்திரமாக வும், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமலும் நிறுத்த அவர்கள் பார்க்கிங் இடத்தை எளிதில் கண்டறிய யூ.ஆர் கோடு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை போக்குவரத்து போலீசார் சுற்றுலா பயணிகளுக்கு வழங்கினர்.

பைக் திருடிய கிருஷ்ணகிரி வாலிபர்கள் கைது

ரூ. 25 லட்சம் மதிப்புள்ள 17 பைக்குகள் பறிமுதல்



போலீசாருக்கு பாராட்டு

கோபேடு பகுதியில் தொடர் பைக் திருட்டில் ஈடுபட்ட கிருஷ்ணகிரி வாலிபர்கள் மூவரை போலீசார் கைது செய்து, 17 பைக்குகளை பறிமுதல் செய்தனர்.

அதன் அடிப்படையில் ஏழு மாதமாக ஆய்வுகள்-100, இரண்டு மாதமாக ஆய்வு நடவடிக்கை மேற்கொண்டு வந்த தனிப்படை போலீசார், திருப்பத்தூர் மாவட்டம் கொண்டு வரும் போலீஸ் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட மூவரும் நீதிமன்ற காவலுக்கு அடைக்கப்பட்டனர்.

ஜன.1ம் தேதி முதல் ஹெல்மெட் அணிவது கட்டாயம்

₹1000 அபராதம், லைசென்ஸ் ரத்து



ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்து புதுச்சேரி போக்குவரத்து சீனியர் எஸ்பி பிரவின்குமார் திரிபாதி வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினார்.

புதுச்சேரி, டிச. 17: புதுச்சேரியில் வருகிற ஜன.1ம் தேதி முதல் இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என போக்குவரத்து போலீசார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் இதுசம்பந்தமாக பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர். அதன்படி, தேற்று மாலை ஒதியஞ் சாலை காவல் நிலையம் அருகே கட்டாய ஹெல்மெட் அணிவது குறித்து போலீசாரின் இன்விசை நிகழ்ச்சியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

இதில் போக்குவரத்து காவல்துறை சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி சாலையில் ஹெல்மெட் அணிந்து வாகனம் ஓட்டி வந்தவாகன ஓட்டிகளுக்கு பூ கொடுத்து, சாலவை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும், ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டி வந்தவர்களுக்கு ஹெல்மெட் அணிவது குறித்து விழிப்புணர்வு தோட்டமல் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் நிலைய (நிழகு) இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன் மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் ஏற்கனவே முன்று முறை 'ஹெல் மெட் அணிவது கட்டாயம் என்று அமல்படுத்தப்பட்ட நிலையில் இந்த விதிமுறைகள் நீர்த்து போய்விட்டது. தற்போது தான் காவது முறையாக ஹெல் மெட் அணிவது கட்டாயம் என்ற சட்ட விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டிருப்பதாகவும் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் தலையீடு இருக்காது சீனியர் எஸ்பி உறுதி

இதுகுறித்து சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி நிருபர்களிடம் கூறுகையில், புதுச்சேரியில் வருகிற ஜன.1ம் தேதி முதல் ஹெல்மெட் அணிவது கட்டாயம். விதிகளை மீறுபவர்களுக்கு ₹1000 அபராதம் விதிக்கப்படும். லைசென்ஸ் 3 மாதத்துக்கு ரத்து செய்யப்படும். ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டி வருபவர்களை கண்காணிக்க சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறைகளை ஏற்கனவே போக்குவரத்து துறை அமல்படுத்தியுள்ளது. ஆகையால் இருசக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணியவேண்டும். இல்லையென்றால் யாராக இருந்தாலும் அபராதம் விதிக்கப்படும், அசியல் தலையீடு ஏதும் இருக்காது என்றார்.



தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர் திருடியதாக கைது செய்தவர்களையும், அவர்களை பிடித்த போலீசாரையும் படத்தில் காணலாம்.

வில்லியனூர் அருகே

தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர்கள் திருட்டு

ஊழியர் உள்பட 5 பேர் கைது

வில்லியனூர், டிச.21- தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர்கள் திருடிய ஊழியர் உள்பட 5 பேரை போலீசார் கைது செய்தனர்.

கம்ப்யூட்டர்கள் திருட்டு

வில்லியனூர் அருகேகுரிலாம்பாக்கம் பாகூர் சாலையில் மேடைக் என்ற தனியார் கம்பெனி உள்ளது. இந்த கம்பெனியில் கடந்த ஜூன் மாதம் 9-ம் தேதி நள்ளிரவு வலைவீசி தேடி வந்தனர்.

5 பேர் கைது

மேலும்கம்பெனியில்வேலை செய்யும் ஊழியர்கள் மிலரிடம் விசாரணை நடத்தினர். அதில் தனிக்குப்பத்தைச்சேர்ந்தஊழியர் முருகன் (வயது 30) முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். அவரிடம் தீவிர விசாரணை நடத்தியதில், நண்பர்கள் மூலம் கம்ப்யூட்டர் திருடியதை ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவர் கொடுத்த தகவலின்பேரில், கரிக்கலாம் பாக்கத்தைச் சேர்ந்த இயாகரா ஜன் (35), மேட்டுமாரமங்கலத்தை சேர்ந்த அய்யப்பன் (28), அழித் (26), செல்லஞ்செரியை சேர்ந்த அருண்குமார் (25) ஆகியோர் திருடியது தெரியவந்தது. இதை யடுத்து முருகன் உள்பட 5 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 6 கம்ப்யூட்டர்களை போலீசார் பறிமுதல்செய்தனர்.

பின்னர் அவர்கள் 5பேரும் புதுவை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர். காலை தனியார் அய்யப் பன் இந்த கம்பெனியின் முன்னாள் ஊழியர் ஆவார்.

எவ்வளவு வேலை, குறைந்த விலைக்கு பொருட்கள் தருவதாக்கூறி

புதுச்சேரி, தமிழகத்தை சேர்ந்த பலரிடம் கோடிக்கணக்கில் மோசடி செய்தவர் கைது

சைபர் கிரைம் போலீசார் அதிரடி



ஆன்லைன் மூலம் நூதன முறையில் பலரை ஏமாற்றி மோசடிகளில் மோசடி செய்த கோட்டக்குப்பத்தை சேர்ந்த அப்துல் சகித்தை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

ஏமாந்தவர்களின் பட்டியல் நீள்கிறது

புதுச்சேரி, டிச. 14: புதுச்சேரி சாரம் பகுதியை சேர்ந்தவர் அப்துல் சாகித் (31). இவர் இருமாதங்களுக்கு முன்பாக கோட்டக்குப்பம் பாரதி நகரில் மனைவி மற்றும் வசித்து வருகிறார். மேலும் சென்னையில், நாப்கின் போன்றவற்றை விற்பனை செய்யும் கடையும் நடத்தி வந்தார். அப்போது நாய்க்குட்டி மற்றும் வீலை உயர்ந்த பழைவகை தரு இதோம் எனக்கூறி பலரை ஏமாற்றியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து புதுச்சேரி மற்றும் தமிழகத்தை சேர்ந்த 20க்கும் மேற்பட்டோரிடம் டி.வி, பிரிட்ஜ், வாஷிங் மிஷின் போன்றவற்றை மொத்த விலைக்கு தருவதாக கூறி விளம்பரம் செய்துள்ளார். கடையில் விற்பனை விட பாதி விலைக்கு தருவதாக கூறியதை நம்பி, பலர் அவருக்கு கூகுள் பே மூலமாக பணத்தை அனுப்பியுள்ளனர். இதுபோல புதுச்சேரி மற்றும் தமிழகத்தை சேர்ந்த பலரும் பொருட்களை மட்டும் பாதி விலைக்கு கொடுத்துள்ளார்.

இதையடுத்து புதுச்சேரி முதலியார்பேட்டை கரிவர் அலுவலகத்தில் வேலை செய்யும் ராஜா (36) என்பவர் லாட்சுப்பேட்டை வந்த தகவலை நம்பி, பல வேறு பொருட்கள் வேண்டுமென்று அவரிடம் சாகித் முறையாக கூறியுள்ளார். ஆனால் கடந்த 8 மாதமாக எந்த பொருட்களையும் அனுப்பவில்லையாம். இதனால் பாதிக்கப்பட்ட ராஜா, புதுச்சேரி சைபர் கிரைம் பிரிவு போலீசாரிடம் புகார் கொடுத்தார். இதையடுத்து எஸ்.பி. பாலகுமார் உத்தரவின் பேரில் இன்ஸ்பெக்டர் இளவரசன், சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயராஜன், சிறப்பு தலை மையிலான போலீசார் மேலும் அப்துல் சாகித் மீது பணத்தை பெறுதல் ஏமாற்றுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து சாகித்தை நேற்று முன்தினம் புதுச்சேரி அழைத்து வந்தனர். பின்னர் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தி, தொடர்ந்து விசாரணை நடத்தினர். போக்குவரத்து குறியீடுகள் மற்றும் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து கேள்விகளை எழுப்பினார். அதற்கு சரியாக பதிலளித்த 20 வாகன ஓட்டிகளுக்கு அதே இடத்தில் ஹெல்மெட்களை பரிசாக வழங்கி, அவர்களின் வாகனங்களில் செல்ல வர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என அப்போது அறிவுரை வழங்கப்பட்டது.

இதுவரை ₹40 கோடி "அவுட்"

இதுதவிர புதுச்சேரி சைபர் கிரைம் எஸ்.பி. பாலகுமார் கூறுகையில், இந்த வருடத்தில் மட்டும் இதுவரையில் ₹40 கோடி அளவுக்கு இணைய வழி மோசடியில் சிக்கி புதுச் சேரி மக்கள் பாதிக்கப்பட் டுள்ளனர். இணைய வழி யில் வரும் எந்தவொரு தகவலையும் எளிதாக நம்பி பணத்தை அனுப் பொதுமக்கள் ஏமாறவேண்டாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார்.

தீபாவளி முதல் பல்வேறு வகுத்து இளைஞர்கள் அங்கு வினரால் சைபர் கிரைம் போலீசார் தேற்று முன்னெ டுக்கப்பட்டது. குறைந்த விலையில் பொருட்கள் தருகிறோம் என்று ஆசை வார்த்தைகளை கூறி பொதுமக்களை ஏமாற்றி வந்தது தெரிய வந்தது. இதனையடுத்து அங்கு பணியாற்றி வந்த 4 பேரை போலீசார் கைது செய்தனர். இவர்களிடமிருந்து 4 செல்போன்கள், 2 லேப்டாப்கள் மற்றும் 4 வங்கி கணக்கு புத்தகங்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

தவளக்குப்பம் சிக்னலில் வினாடி-வினா நடத்தி

வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட் பரிசு கொடுத்த சீனியர் எஸ்.பி.



தவளக்குப்பம் நான்கு முனை சந்திப்பில் வாகன ஓட்டிகளுக்கு வினாடி-வினா நடத்தி ஹெல்மெட் பரிசாக வழங்கப்பட்டது.

பாகூர், டிச. 20: புதுச்சேரியில் வரும் ஜனவரி 1ம் தேதி முதல் ஹெல்மெட் அணிவது கட்டாயம் என அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் தவளக்குப்பம் நான்கு முனை சந்திப்பில் 'நமது புதுச்சேரி நிச்சயம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று மாலை நடந்தது. இதில் போக்குவரத்து சீனியர் எஸ்.பி. பிரவீன்குமார் திரிபாதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அப்போது அங்கு வந்த வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து வினாடி-வினா நடத்தினார். போக்குவரத்து குறியீடுகள் மற்றும் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து கேள்விகளை எழுப்பினார். அதற்கு சரியாக பதிலளித்த 20 வாகன ஓட்டிகளுக்கு அதே இடத்தில் ஹெல்மெட்களை பரிசாக வழங்கினார். அவர்களின் தலையில் அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். ஹெல்மெட் இல்லாமல் வந்த வாகன ஓட்டிகள் பரிசாக கிடைத்த ஹெல்மெட்டை மகிழ்ச்சியுடன் அணிந்து சென்றனர்.

தொடர்ந்து அவர் கூறுகையில், இருசக்கரத்தில் செல்பவர்கள், போலீசார் அறிவுறுத்துவதால் மட்டுமே ஹெல்மெட்டை அணியக் கூடாது. ஹெல்மெட் இல்லாமல் சென்று விபத்தில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்து வருகின்றனர்.

இதனால் ஏராளமான குடும்பங்கள் சூறும்ப தலைவரை இழந்து அனாதையாக இருக்கிறது. இதனை கட்டுப்படுத்த பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வரும் ஜனவரி மாம் தேதி முதல் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும் என சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை அனைவரும் தவறாமல் பின் பற்ற வேண்டும். அதனை மீறி ஹெல்மெட் இல்லாமல் பைக்கில் செல்பவர்களுக்கு அபராதமும், அவர்களின் ஓட்டுநர் உரிமம் 3 மாதம் ரத்தும் செய்யப்படும். உயர்நீதி மன்ற உத்தரவின் அடிப்படையில் உயிரை காக்க வேண்டியது எங்களது கடமையாகும். அதன் அடிப்படையில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும் கட்டாயமாக ஹெல்மெட் அணிய வேண்டும்.

பெரும்பாலான வாகன ஓட்டுநர்களுக்கு போக்குவரத்து குறியீடுகள் குறித்த விழிப்புணர்வு முழுவதும் சென்றடையவில்லை. இது குறித்து போக்குவரத்து காவல் துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தியும் இட்டபடி டப்பட்டுள்ளது. ஓட்டுநர் உரிமம் வழங்கும் இடத்தில் போக்குவரத்து குறியீடுகள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்த வேண்டும். அவற்றை தெரிந்த பிறகு, அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் தெற்கு பகுதி போக்குவரத்து எஸ்.பி. மோகன்குமார், இன்ஸ்பெக்டர்கள் கணேசன், கோகுலகிருஷ்ணன் மற்றும் எஸ்ஐக்கள், போலீசார் கலந்துகொண்டனர்.

ஆனலைன் மோசடி கும்பலிடம் மக்கள் இழந்த ரூ.1.36 கோடி மீட்பு

70 செல்போன்கள் கண்டுபிடிப்பு



புதுவையில் ஆன்லைன் மோசடி கும்பலிடம் இருந்து மீட்ட பணத்தை பாதிக்கப்பட்டவர்களிடம் சைபர் கிரைம் எஸ்பி பாஸ்கரன் ஒப்படைத்தார். அருகில் இன்ஸ்பெக்டர் கீர்த்தி, திவாகரன்.

புதுச்சேரி, ஜன. 23: புதுச்சேரியில் ஆன்லைனில் மோசடி, நபர்களால் கொள்ளை டிக்கப்பட்ட 9 வழக்குகளில் தொடர்புடைய ரூ.136 கோடி பணத்தை சைபர் கிரைம் போலீசார் மீட்டு பொதுமக்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மற்றும் பொதுமக்கள் தவறிட்ட 70 செல்போன்களை கண்டுபிடித்து ஒப்படைக்கும் நிகழ்ச்சி கோரிமேட்டில் உள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்தில் நேற்று மாலை நடந்தது.

இதில் சைபர் கிரைம் எஸ்பி பாஸ்கரன் கலந்து கொண்டு ஆன்லைனில் பணத்தை இழந்த 9 பேருக்கு ரூ.136 கோடிக்கான வங்கி வரைவோலையை வழங்கினார். தொடர்ந்து, பொதுமக்கள் தவறவிட்ட 70 செல்போன்களை கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட நபர்களிடம் வழங்கினார். அப்போது இன்ஸ்பெக்டர்கள் கீர்த்தி, திவாகரன் மற்றும் போலீசார் உடனிருந்தனர். இதில் பூமியான பெட்டையை சேர்ந்த முருகன் என்பவர் ஆன்லைனில் ரூ.19 லட்சத்தை முதலீடு செய்து ஏமாந்துள்ளார். அவர் புகார் அளித்த உடனே 26 வங்கி கணக்குகளை முடக்கி, அதன் மூலம் பட்டுள்ளது மேலும், ரூ.70 லட்சம் மீட்டு முருகனிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று சைபர் கிரைம் எஸ்பி பாஸ்கரன் கருகையில், புதுச்சேரி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் கடந்த 22 நாட்களில் 255 ஆன்லைன் மோசடி வழக்குகள் பெறப்பட்டு இதன் மூலம் 5.37 கோடி பணத்தை மக்கள் இழந்துள்ளனர். புகார் கள் பெற்றவுடன் மோசடி நபர்களின் வங்கிகணக்கை முடக்கி நீதிமன்ற உத்தரவின் மூலம் 9 வழக்குகளில் ரூ.136 கோடி நிதியும் பெறப் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் கடந்த 22 நாட்களில் 255 ஆன்லைன் மோசடி வழக்குகள் பெறப்பட்டு இதன் மூலம் 5.37 கோடி பணத்தை மக்கள் இழந்துள்ளனர். புகார் கள் பெற்றவுடன் மோசடி நபர்களின் வங்கிகணக்கை முடக்கி நீதிமன்ற உத்தரவின் மூலம் 9 வழக்குகளில் ரூ.136 கோடி நிதியும் பெறப்பட்டுள்ளது. அதன் மூலம் 70 செல்போன்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சமீபத்தில், சைபர் கிரைம் காவல் நிலையத் தில் புதிய வசதி புதார்தாரர் பெறப்பட்டுள்ளது. அதா வது, சைபர் மோசடி செய் பவர் பெரும் மகாகுக்கு தெரியாமல் தனது வங்கி கணக்கில் இருந்து தொடர்பாக நிலம் தொடர்பாக பெறப்பட்ட புகார் மனுக்களில் விளம்பரம் கண்டால் அதை நம்பி, அதன் மூலம் பொருட்களை வாங்குவதற்கு முந்தைய நாள் நிலவரத்தில் புகார் அளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

2 ஆண்டுகளில் 285 கஞ்சா வழக்குகள் 672 பேர் கைது; 216 கிலோ பறிமுதல்

சீனியர் எஸ்.பி., நாரா சைதன்யா தகவல்



நாரா சைதன்யா

புதுச்சேரி, ஜன. 11– புதுச்சேரியில் கடந்த 2 ஆண்டுகளில் 285 கஞ்சா வழக்கு பதிவு செய்து, 672 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். 216 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாக சீனியர் எஸ். பி. நாரா சைதன்யா தெரி வித்தார்.

அவர் கூறியதாவது:

புதுச்சேரியில் போலீஸ் சார்பில் பள்ளி, கல்லூரி கல்வி நிறுவனங்களில் கஞ்சா ஒழிப்பு விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறோம்.

கடந்த ஆண்டு மட்டும் 22 நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டது. பள்ளி மாணவர் களிடம் கஞ்சா பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்க வீதிநாடகங்கள் செய் யப்பட்டு வருகிறது.

புதுச்சேரியில் கடந்த 2022ம் ஆண்டு மட்டும் 137 கஞ்சா வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில், 67.9 கிலோ கஞ்சா பறிமுதல் செய்ததுடன், 311 பேர் கைது செய்யப்பட்டனர். இது 148 கஞ்சா வழக்கு பதிவு செய்து, 128.2 கிலோ கஞ்சா பறி முதல் செய்து 361 பேர் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இரு ஆண்டுகளில் மொத்தம் 285 வழக்கு களும், 672 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 216 கிலோ கஞ்சா பறிமு தல் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் ஒரு கஞ்சா குற்ற வாளியை கைது செய்து வருகிறோம்.

கடந்த ஆண்டு கஞ்சா வியாபாரி ஒருவரை போதை பொருள் விற் பனை தடுப்பு காவலில் (குண்டாஸ்) கைது செய் துள்ளோம்.

மேலும் 2 பேர் மீது போதை பொருள் விற் பனை தடுப்பு காவல் சட்டத் தின் கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய் யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கஞ்சா விற் பனை தொடர்பாக தகவல் கிடைத்தால், கட் டணம் இல்லா தொலை பேசியான 112 அல்லது 9489205100 மொபைல் போன் வாட்ஸ்ஆப் எண் ணில் தெரிவிக்கலாம். போலீசார் நிலையும் மாலை 5:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை அனைத்து போலீஸ் நிலைய அதிகா ரிகளும் ரோந்து செல்வது டன், வாகன சோதனை, சுவிடிசிங், மதுபோதையில் வாகனம் ஓட்டுதல், பொது இடத்தில் மது குடிப்போர் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர், கூறினார்.

பட்டாசு தொழிற்சாலையில் போலீசார் திடீர் ஆய்வு



கே.ஆர்.பாளையத்தில் இயங்கி வரும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் இன்ஸ்பெக்டர் ராஜகுமார் தலைமையில் போலீசார் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அருகில், சப் இன்ஸ்பெக்டர் பிரியா.

திருக்கனூர், அக். 24– புதுச்சேரி மேற்கு எல். பி., வம்பீத பெட்டி உத்தர வின் பேரில் திருக்கனூர் இன்ஸ்பெக்டர் ராஜகுமார் தலைமையில் சப் இன்ஸ் பெக்டர் பிரியா மற்றும் போலீசார் நேற்று கே.ஆர். பாளையம் பகுதியில் இயங் கும் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் நேர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது, வெடி மருந்து வைக்கப்பட்டுள்ள குடோன் பகுதியில் உள்ள பாதுகாப்பு உபகரணங் களை பார்வையிட்டனர். வெளிநபர்களிடம் மொத் தமாக பட்டாசுகள் விற் பனை செய்யும் போது, அவர்களிடம் இருந்து அடையாள அட்டை நகலை பெற்று கொண்டு ஆய்வின் போது, வெடி மருந்து வைக்கப்பட்டுள்ள குடோன் பகுதியில் உள்ள பாதுகாப்பு உபகரணங் களை பார்வையிட்டனர். தயாரிப்பு தொழிற்சாலை நடத்துவதற்காக பெறப் பட்ட உரிமம், விற்பனை செய்வதற்கான பில் உள் ளிட்ட ஆவணங்களை போலீசார் சரிபார்த்தனர். வங்கும் வேண்டும் என உரிமையாளருக்கு போலீ சார் உத்தரவிட்டனர். தொடர்ந்து, பட்டாக தயாரிப்பு தொழிற்சாலை நடத்துவதற்காக பெறப் பட்ட உரிமம், விற்பனை செய்வதற்கான பில் உள் ளிட்ட ஆவணங்களை போலீசார் சரிபார்த்தனர்.

வில்லியனூர் காவல் நிலைய போலீசாரிடம்

ஆவணங்கள் இல்லாமல் பைக் ஓட்டி வந்து சிக்கிய கல்லூரி மாணவர்கள்

பெற்றோரை வரவழைத்து அறிவுரை



வில்லியனூர் காவல்நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சரண்யா முன்னிலையில் போலீசார் உளவம்பக்கம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி, அக். 19: புதுச் சேரியில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தின மும் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரை யிலும் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட வேண்டும் என சீனியர் எஸ்.பி. உத்தர விட்டுள்ளார்.

அதன்படி புதுவை நகர பகுதிகளில் போலீசார் தீவிர வாகன சோதனை யில் ஈடுபட்டு வருகின்ற னர். அதன் ஒரு பகுதியாக ரோம்புபுற பகுதியான வில்லியனூர் காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் தலைமையில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலை யில் நேற்று காலை உளவாய்க்கால் நான்கு முனை சந்திப்பில் சப்-இன்ஸ்பெக் டர் சரண்யா முன்னிலை யில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது எதிரே வந்த இடமாக வந்த இளைஞர் கள் மற்றும் வாகன ஓட்டு களை மடக்கி வண்டியின் ஆவணங்களை ஆய்வு செய்தனர். அதில் இன் னங்களுக்கு உடனடியாக இன்சூரன்ஸ் போடுமாறு அறிவுரை கூறி பின்பு வாக னங்களை ஒப்படைத்தனர். இதேபோல் காலை நேரத்தில் அப்பகுதியில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

மாமூல் கேட்டு தகராறில் ஈடுபட்டார் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை

ரவுடிகளுக்கு இன்ஸ்பெக்டர் எச்சரிக்கை



முதலியார்பேட்டை இன்ஸ்பெக்டர் தனகேசன் தலைமையில் ரவுடிகள் மற்றும் குற்றப் பின்னணியில் உள்ளவர்கள் கூட்டம் நடந்தது.

புதுச்சேரி, அக். 19– முதலியார்பேட்டை பகுதியில் மாமூல் கேட்டு தகராறில் ஈடுபட்டால், அவர்கள் மீது குண்டர் சட்டத்தின் நடவடிக்கை எடுக்கப்படும் என இன்ஸ்பெக்டர் தனகேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுச்சேரி, இந்திரா நகரில் அருகே மாமூல் கேட்டு ரவுடிகள் சிலர் வியாபாரியிடம் தகராறில் ஈடுபட்டு தாக்கியதில் சம்பவம் பதறவைத்து பதிந்தியுள்ளது. இதை தொடர்ந்து, எஸ்.எஸ்.பி., தராஜ் மைதாயா உத்தரவின் பேரில், திருக்கு எஸ்.பி., வடக்கு சாலைகள் அதிவு துத்தலில்படி முத்தியால் பேட்டை இன்ஸ்பெக்டர் தனகேசன் தலைமையில் ரவுடிகள் மற்றும் குற்றப் பின்னணியில் உள்ளவர்கள் கூட்டம் நடந்தது.

இதில் பங்கேற்ற ரவுடிகள் மாமூல் கேட்டு தகராறில் ஈடுபட்டால், அவர்கள் மீது குண்டர் சட்டம் பாயும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், அந்த பகுதியில் உள்ள ரவுடிகள் குறித்த விவரங்களை போலீசார் சேகரித்து வருகின்றனர்.

தனியார் நிறுவன மேலாளரிடம்

ரூ.39¼ லட்சம் மோசடி செய்த என்ஜினீயர் கைது

ஐதராபாத்தில் சைபர் கிரைம் போலீசார் சுற்றி வளைத்தனர்



மோசடி வழக்கில் தேடப்பட்டவரை போலீசார் கைது செய்த காட்சி.

புதுச்சேரி, அக். 1– புதுச்சேரியில் தனியார் நிறுவன மேலாளரிடம் ரூ.39¼ லட்சம் மோசடி செய்த வழக்கில் ஐதராபாத் என்ஜினீயரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

தனியார் நிறுவன மேலாளர்

புதுச்சேரியை சேர்ந்தவர் கோபி. தனியார் நிறுவன மேலாளர். இவர் கடந்த ஜூலை மாதம் அவரை பங்குச்சந்தையில் அதிகலாபம் ஈட்டலாம் என நம்பி பலமோ தவணைகளாக ரூ.39¼ லட்சம் செலுத்தி ஏமாந்தார். அவர் பணம் செலுத்திய வங்கி கணக்கு விவரங்களை வைத்து புதுச்சேரி சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

மத்திய பிரதேசத்தில் கைது

இந்த வழக்கு தொடர்பாக மத்திய பிரதேச மாநிலம் போபாலை சேர்ந்த ஐதராபாத்தில் வசித்து வரும் என்ஜினீயர் ஒருவரை போலீசார் கைது செய்தனர். அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர். அதில் அவர் பல்வேறு நபர்களிடம் இருந்து பல்வேறு தவணைகளாக ரூ.39¼ லட்சம் பணத்தை பெற்றது தெரியவந்தது. இதனை தொடர்ந்து, போலீசார் அவரை கைது செய்து, அவரிடம் இருந்து 2 செல்போன்கள், 2 மடிக்கணினிகள், 2 வங்கி கணக்கு புத்தகங்கள் மற்றும் 2 ஏ.டி.எம் கார்டுகளை பறிமுதல் செய்தனர்.

தனியார் நிறுவன மேலாளரிடம் ரூ.39¼ லட்சம் மோசடி செய்த என்ஜினீயர் கைது செய்யப்பட்டது குறித்து பத்திரிகையாளர்களிடம் புதுச்சேரி சைபர் கிரைம் போலீஸ் சூப்பிரண்டு முகேஷ் சவுத்ரி பாதிலே விளக்கி கூறினார். இந்த பேட்டியின் போது இன்ஸ்பெக்டர் தனகேசன் உடனிருந்தார்.

பணம் கொடுத்து ஊருக்கு அனுப்பி வைத்த

சைபர் கிரைம் போலீசுக்கு மேற்கு வங்க வாலிபர் பாராட்டு



புதுச்சேரி சைபர் கிரைம் போலீசாருக்கு நன்றி தெரிவித்த மேற்கு வங்க வாலிபர்.

புதுச்சேரி, நவ. 27: மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங் பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித் சவுத்ரி (32). தனியார் கம்பெனி சூப்பர்வைசர். இவர், கடந்த 7ம் தேதி, உறவினரை தேடி புதுச்சேரிக்கு வந்த இடத்தில் அவரது பைக், செல்போன் தொலைந்து விட்டது. செல்போனில் உள்ள ஜிபே செயலி மூலமாகத்தான் அவர் பணம் செலுத்தி வந்தார். புதுச்சேரியில் தெரிந்தவர்களோ, வேறு எந்த உறவினர்களோ இல்லாத நிலையில் சைபர் கிரைம் காவல் நிலையத்துக்கு வந்து, தன்னுடைய செல்போன் காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுத்தார். மேலும், தன்னுடைய நிலைமையையும் விளக்கிக் கூறினார். காவல் நிலையத்தில் அப்போது பணியில் இருந்த காவலர்கள் ஜெயக்குமார், கமலி ஆகிய இருவரும், அவருக்கு உணவு வாங்கி கொடுத்து, அவர் ஊர் திரும்ப தேவையான பணத்தை கொடுத்தனர். மேலும், காவலர் ஜெயக்குமார், பேருந்து நிலையத்தில் அவரை இறக்கி விட்டு வந்தார். ஊர் திரும்பிய ரஞ்சித் சவுத்ரி மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, தனக்கு உதவி செய்த போலீசாரை பாராட்டியே ஆக வேண்டும் என்று, நேற்று காலை புதுச்சேரி சைபர் காவல் நிலையத்திற்கு உறவினர்கள் 2 பேருடன் வந்து, இந்தியில் தனது கைப்பட ஒரு கடிதம் எழுதி கொடுத்து, உதவிக்காக கொடுத்து அனுப்பிய பணத்தையும் திருப்பி கொடுத்து நன்றி தெரிவித்து பாராட்டி சென்றனர்.

தன்னுடன் வாழாமல் பிரிந்து சென்றதால் கோபம்

மனைவியின் ஆபாச புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பரப்பிய 2வது கணவர் கைது



புதுச்சேரியில் மனைவியின் ஆபாச புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பரப்பிய 2வது கணவரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரியில் பரபரப்பு

புதுச்சேரி, நவ. 26: புதுச்சேரியில் மனைவியின் ஆபாச புகைப்படங்களை சமூக வலைதளங்களில் பரப்பிய 2வது கணவரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி கூடப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த சாந்தி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண் புதுச்சேரி சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். அதில், மர்ம நபர் ஒருவர் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு எனது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் பல்வேறு ஆபாச படங்களை இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப்போன்ற சமூக வலைத்தளங்கள் மூலமாக எனக்கும் என் உறவினர்களுக்கும் அனுப்பி அவர் சொல்லும் இடத்திற்கு நான் தனிமையில் வர வேண்டுமென மிரட்டுகிறார். எனவே அவரை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் அவரது உறவினர்களுக்கு புகைப்படம் அனுப்பிய நபரின் இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் எந்த ஊரில் இருந்து உபயோகப்படுத்தப்படுகிறது என்பதை கண்டறிந்தனர். பிறகு அது எந்த செல்போன் மூலமாக செயல்படுத்தப்படுகிறது என்பதை கண்டுபிடித்து அதன் டவர் லொகேஷனை வைத்து அந்த மர்ம நபரை கண்டறிந்தது. பின்னர் இன்டிவனம் அருகே பதுங்கியிருந்த அந்த மர்ம நபரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதில் அவர் காஞ்சிபுரத்தை சார்ந்த பாண்டியன் (30) என்பதும், சாந்தியின் இரண்டாவது கணவர் என்பதும் தெரியவந்தது. அவருக்கு பல்வேறு பெண்களுடன் தொடர்பு இருப்பது தெரிந்தவுடன், சாந்தி அவரை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார். மேலும் தன்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றும் தன்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் உன்னை அசிங்கப்படுத்து வேன் என்றும் கூறி பாண்டியன் தெரியவந்தது. பெண்ணின் ஆபாச புகைப்படங்களை அனுப்பிய குற்றத்துக்காக இணைய வழி சட்டத்தின் படி பாண்டியனை, இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன் மற்றும் கீர்த்தி தலைமையிலான போலீசார் சுதாகர், அருண் மற்றும் பெண் காவலர் அபிநயா ஆகியோர் கைது செய்தனர். அவரிடம் இருந்து ஆபாச புகைப்படங்கள் அனுப்ப பயன்படுத்திய செல்போன்களை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர். இது குறித்து சைபர் கிரைம் எஸ்பி பாஸ்கரன் கூறுகையில், பெண்கள் தங்களுடைய தனிப்பட்ட புகைப்படங்களை எடுத்து மற்றவர்களுடன் பகிர்வதால் பின்னாளில் அந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களால் பிரச்சனைக்கு உள்ளாகிறார்கள். பிறகு அந்த புகைப்படங்கள் வீடியோக்களை வைத்துக்கொண்டு சிலர் மிரட்டப்படுகிறார்கள். தனிப்பட்ட புகைப்படங்களை எடுக்கும் போது மிகுந்த எச்சரிக்கையுடன்

கார் கண்ணாடிகளில் கருப்பு ஸ்டிக்கர் அகற்றம்

போக்குவரத்து போலீசார் அதிரடி



புதுச்சேரி கிழக்கு போக்குவரத்து காவல்நிலைய இன்ஸ்பெக்டர் நாகராஜ் தலைமையிலான போலீசார் கார் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டிருந்த கருப்பு நிற ஸ்டிக்கரை அகற்றினர்.

புதுச்சேரி, நவ. 28: இந்தியாவில் கடந்த 2012ம் ஆண்டு கார் கண்ணாடிகளில் கருப்பு நிற ஸ்டிகர்கள் ஒட்டக்கூடாது என உச்சநீதிமன்றம் தடை விதித்தது. கார்களில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், ஆட்டோமொபைல்களில் நடக்கும் அதிகப்படியான குற்றங்களை தடுக்கவும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி கார் கண்ணாடிகளில் கருப்பு நிற ஸ்டிக்கர் ஒட்டப்படாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது மீண்டும் கார் கண்ணாடிகளில் கருப்பு நிற ஸ்டிக்கர் ஒட்டுவது நடைமுறைக்கு வந்துள்ளது. இந்நிலையில் இதனை தடுக்க புதுச்சேரி கிழக்கு போக்குவரத்து காவல் நிலையம் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஒரு வாரமாக கார் கண்ணாடிகளில் கருப்பு நிற ஸ்டிக்கர் ஒட்டி வரும் கார்களை மடக்கி அந்த ஸ்டிக்கரை அகற்றுமாறு போலீசார் அறிவுறுத்தி வருகின்றனர். மேலும் அவர்களுக்கு அபராதமும் விதித்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று நேரு வீதி, செஞ்சி சாலை, புஸ்சி வீதி உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து காவல்நிலைய இன்ஸ்பெக்டர் நாகராஜ், சப்-இன்ஸ்பெக்டர் குமார் உள்ளிட்ட போலீசார் கார்களை மடக்கி கார் கண்ணாடிகளில் ஒட்டப்பட்ட கருப்புற நிற ஸ்டிக்கரை அகற்றி ஓட்டுனர்களுக்கு அபராதம் விதிக்கனர்.



காரைக்கால் மாவட்ட

காவல்துறையின் 112 ஆம்புலன்ஸ் சேவை

கரைக்கால், நவ.28- காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில், காரைக்கால் வடக்கு- காரைக்கால் தெற்கு ஆகிய 2 பகுதிகளுக்கு, 'அவசர எண் நம்ம 112 ஆம்புலன்ஸ்' சேவையை மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா நேற்று மாலை தொடங்கி வைத்தார். இதன் மூலம் மொபைல் வாகனம் 2 ஷிப்ட் முறையில் அதி தீவிர கண்காணிப்பில் ஈடுபடும்.

காவல்துறை கட்டுப்பாட்டு அறையின் அவசர எண் 112 அழைக்கப்பட்டவுடன் விரைவில் செயல்பட்டு சம்பந்தப்பட்ட இடத்திற்கு உடனே வந்து நடவடிக்கை எடுக்க இந்த சேவையை காரைக்கால் மாவட்ட பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன் மற்றும் போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



காணாமல் போன ரூ.3 லட்சம் செல்போன்கள் மீட்பு

உரியவர்களிடம் ஒப்படைப்பு

காரைக்கால், ஜன.6-

காரைக்கால். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சமீபத்தில் காணாமல் போன, தவறவிட்ட மற்றும் திருட்டு போன ரூ.3 லட்சம் மதிப்பிலான 15 செல்போன்கள் மீட்டு தருமாறு சம்பந்தப்பட்டவர்கள் சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தனர். அதன்பேரில் சைபர் கிரைம் போலீசார் ஐ.எம்.இ.ஐ. நம்பரை வைத்து 15 செல்போன்களையும் மீட்டனர். அதனை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நடந்தது.

நிகழ்ச்சியில் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு மணிஸ் கலந்து கொண்டு உரியவர்களிடம் செல்போனை ஒப்படைத்தார். நிகழ்ச்சியில் போலீஸ் சூப்பிரமணியன், சைபர் கிரைம் பிரிவு இன்ஸ்பெக்டர் பிரவீன்குமார் மற்றும் போலீசார் உடன் இருந்தனர்.

திருட்டு போன ரூ.5 லட்சம் செல்போன்கள் மீட்பு

உரியவர்களிடம் ஒப்படைப்பு

காரைக்கால், நவ.19-

காரைக்காலில் திருட்டு போன ரூ.5 லட்சம் மதிப்புள்ள செல்போன்களை மீட்டு போலீசார் உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

செல்போன்கள் திருட்டு

காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக பல்வேறு இடங்களில் செல்போன்கள் திருட்டுபோனது. மேலும் சிலர் தங்களது செல்போனை தொலைத்துவிட்டனர். எனவே திருட்டு மற்றும் காணாமல் போன செல்போன்களை மீட்டுதரவேண்டும் என காேரி காரைக்கால் நகர், கோட்டுச்சேரி, நெடுங்காடு, திருநள்ளாறு, நிரபட்டினம், நிரவி உள்ளிட்ட போலீஸ் நிலையங்களில் புகார்கள் குவிந்தன.

அதன்பேரில் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா உத்தரவின் பேரில் இணையவழி குற்றங்கள் தடுப்பு பிரிவு போலீசார் செல்போன் எண்ணின் ஐ.எம்.இ.ஐ. நம்பரை வைத்து கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டனர். போலீசார் லட்சம் மதிப்பிலான 50 செல்போன்கள் மீட்கப்பட்டன.

உரியவர்களிடம் ஒப்படைப்பு

இதைத்தொடர்ந்து செல்போன்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி காரைக்கால் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நேற்று நடந்தது. சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமை தாங்கி, மீட்கப்பட்ட செல்போன்களை உரியவர்களிடம் ஒப்படைத்தார். நிகழ்ச்சியில் போலீஸ் சூப்பிரண்டு கப்பிரமணியன் உள்ளார்.



திருட்டு போன செல்போன்கள் உரியவரிடம் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா வழங்கியபோது எடுத்த படம். அருகில் போலீஸ் சூப்பிரண்டு கப்பிரமணியன் உள்ளார்.

கலந்துகொண்டனர்.

அப்போது போலீசார் செல்போன்களை பத்திரமாக பயன்படுத்தும் முறை குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர். மேலும் பொதுமக்களின் செல்போனுக்கு வரும் ஓடிபி.க்களை காரணம் இன்றியாரிடமும் பகிரக்கூடாது வங்கிகளின் பெயரை சொல்லிபெருமளவில் சைபர் குற்றங்கள் நடக்கின்றன. அதையெல்லாம் விழிப்புணர்வோடு மக்கள் எதிர்கொள்ள வேண்டும் என போலீசார் கேட்டுக்கொண்டனர்.

மகாதமா காநது பல மருததுவ கல்லூரியில்

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, நவ. 23: புதுச்சேரி, கோரிமேடு மகாத்மா காந்தி பல் மருத்துவ கல்லூரியில் போக்கு வரத்து காவல் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி கோரிமேடு பகுதியில் உள்ள மகாத்மா காந்தி முதுநிலை பல் மருத்துவ நிறுவனத்தில் பல் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் கென்னடி பாபு தலைமை தாங்கினார். போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் (வடக்கு, மேற்கு) புனர்வு பற்றி விளக்கமாக செல்வம் நெப்பொலியன் விருந்து கூறினார். இந்நிகழ்ச்சியில் தினராக கலந்து கொண்டு மகாத்மா காந்தி முதுமாண வர்களுக்கு போக் நிலை பல் மருத்துவ நிறுகுவரத்து விதிகள் மற்றும் வன மாணவர்கள் கலந்து சாலை பாதுகாப்பு விழிப் கொண்டனர்.



புதுச்சேரி கோரிமேடு மகாத்மா காந்தி பல் மருத்துவ கல்லூரியில் நடந்த சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் எஸ்.பி. செல்வம் பேசினார்.

காரைக்காலில் பரபரப்பு

ரெஸ்டோ பார் விடுதியில் ஹைடெக் முறையில் கஞ்சா புகைத்த கும்பல்

மேலாளர், 8 வாலிபர்கள் அதிரடி கைது

காரைக்கால், நவ. 24:

காரைக்கால் மாவட்டம் சென்னை -நாகை தேசிய நெடுஞ்சாலையில் நிரவி பகுதியில் தனியார் ரெஸ்டோ பாரின் தங்கும் விடுதியில் சில இளைஞர்கள் அறையை வாடகைக்கு எடுத்துள்ளனர். நேற்று மதியம் ஒரு அறையில் இருந்து திடீரென அதிகளவில் புகை வந்துள்ளது. இதனை அக்கம் பக்கத்தினர் பார்த்துவிட்டு நீ விபத்து ஏற்பட்டிருக்கக்கூடுமோ என்ற அச்சத்தில் விடுதி அறையின் ஜன்னல் வழியாக பார்த்த போது, அங்கு வாலிபர்கள் கஞ்சா பிடிப்பதுபோல் தெரிந்தது.

இதனையடுத்து அங்கிருந்தவர்கள் நிரவி காவல் நிலையத்திற்கு தகவல் அளித்துள்ளனர். அதன்பேரில் திருப்பட்டினம் இன்ஸ்பெக்டர் மதிய திருவுடன் போலீசார் விரைந்து வந்து ரெஸ்டோ பாரின் விடுதி அறை கதவை திறந்துள்ளனர். அப்போது, மேகம் சூழ்ந்ததுபோல் கரும் நெடியுடன் கூடிய கஞ்சா புகை வெளியே நிரம்பி வழிந்தது. போலீசாரை மயக்கமடையச் செய்யும் வகையில் அதீத கஞ்சா புகையில் 8 வாலிபர்கள் கஞ்சா அடித்ததை கண்டு போலீசார் அதிர்ச்சியடைந்தனர்.

இதனைத்தொடர்ந்து காரைக்கால் தெற்கு எஸ்பி அப்பிரமணியனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, சம்பவ இடத்திற்கு விரைந்த எஸ்பி அப்பிரமணியன் தலைமையிலான போலீசார் கஞ்சா கும்பல் தங்கியிருந்த அறை முழுவதும் சல்லடை சல்லடையாக சோதனை செய்தனர். அப்போது ஏஸி இயந்திரம் மற்றும் ஜன்னல் கதவுகளில் கஞ்சா புகை படிந்திருந்தது. மேலும் அறையில் இருந்த 8 வாலிபர்களிடம் விசாரணை நடத்தினர். அதில், கஞ்சாவை சொருகி தண்ணீரில் வரும் புகையை வைத்து ஹைடெக் முறையில் கஞ்சாவை உபயோகித்து போதையில் ஈடுபட்டது தெரிந்தது. இதுதவிர விற்பனை செய்வதற்காக பெரிய கஞ்சா பாக்கெட்டுகளையும் செய்து வைத்துள்ளனர்.

மேலும், ரெஸ்டோ பாரிலிருந்து நகரங்களில் மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டு வந்த இதுபோன்ற ஹைடெக் கஞ்சா தற்போது புதுச்சேரி, காரைக்காலிலும் இளைஞர்கள் கைகளில் சர்வசாதாரணமாக கிடைத்து உபயோகித்து வருவதை கண்டு போலீசார் அதிர்ச்சியடைந்தனர். பின்னர், வாலிபர்களிடமிருந்து இருந்து ₹30,000 மதிப்புள்ள கூடார், 260 கிராம் கஞ்சா பொட்டலங்கள், கேமரா உள்ளிட்ட அனைத்தையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில், காரைக்கால் தருமபுரத்தை சேர்ந்த திருத்திக் ரோஷன் (19), திருவேணுமார் (21), கருக்கனாச்சேரியை சேர்ந்த ஆதில் (27), புதுத்துறையை சேர்ந்த ரபீக் (19), திருப்பட்டினத்தை அந்தோணி புரூட்ஸ்ராஜா (24), நெடுங்காடு செருமாவிலங்கையை சேர்ந்த வதில் (19) என்பது தெரியவந்தது.

தொடர்ந்து 8 பேரையும் கைது செய்து கஞ்சா பொட்டலங்கள், 7 செல்போன்கள் மற்றும் ₹7500 பணம் பறிமுதல் செய்யப்பட்டது. 8 பேரும் காரைக்கால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு இணை சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் போலீஸ் அவணங்கள் இன்றியும், கஞ்சா பிடிப்பதற்காக வாடகை விட்ட விடுதி மேலாளர் முபாரக்கை போலீசார் கைது செய்தனர். மேலும் கஞ்சா விடைக்க உதவியாக இருந்த நிரபசியை சேர்ந்த முகமது அலீக் என்பவரை பிடித்து போலீசார் விசாரணை செய்து தமிழகத்தில் இருந்து கஞ்சா சப்ளை செய்பவரை தேடி வருகின்றனர்.



காரைக்காலில் ரெஸ்டோ பார் விடுதியில் கஞ்சா புகைத்த இளைஞர்களை கைது செய்த போலீசார்.

வாகன சோதனையில் சிக்கினர்

பைக்குகளை திருடிய 3 வாலிபர்கள் கைது

3 வண்டிகள் பறிமுதல்

புதுச்சேரி, நவ. 18: புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் பைக்குகளை திருடிய 3 வாலிபர்களை லாஸ்பேட்டை போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி கருவடிக்குப்பம் சிவாஜி சிலை அருகே லாஸ்பேட்டை இன்ஸ்பெக்டர் இனியன், சப்-இன்ஸ்பெக்டர் அன்சர் பாஷா தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் மாலை தீவிர வாகன சோதனை மேற்கொண்டனர். அப்போது அவ்வழியே ஒரே பைக்கில் 3 பேர் வந்தனர். அந்த பைக்கை தடுத்து, அவணங்களை தும், லாஸ்பேட்டையில் 2 இடங்களிலும், ரெட்டி வண்டி என தெரியவந்தது. யார் பாளையம் காவல்



புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் பைக்குகள் திருடிய 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

புகையிலை பொருட்கள் விற்பனை கடைகளில் போலீஸ் திடீர் சோதனை



■ கோரிமேடு டி.நகர் போலீசார் எஸ்.பி., வீரவல்லபன் தலைமையில் தட்டாஞ்சாவடி வி.வி.பி., நகர் பகுதியில் உள்ள பெட்டி கடைகளில் புகையிலை பொருட்கள் விற்பனை தொடர்பாக சோதனை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

புதுச்சேரி, நவ. 9– வழுதாவூர் சாலை, மேட்டுப்பாளையம் பகுதியில் குட்கா உள்ளிட்ட புகையிலை பொருட்கள் விற்பனை குறித்து டி.நகர் போலீசார் திடீர் சோதனை நடத்தியதுடன், விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

புகையிலை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கோரிமேடு டி.நகர் போலீஸ் சார்பில், பெட்டி கடைகளில் தடை செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என சோதனை நடந்தது.

வடக்கு எஸ்.பி., வீரவல்லபன், இன்ஸ்பெக்டர் பாலமுருகன், சப் இன்ஸ்பெக்டர் ரமேஷ், புகையிலை ஒழிப்பு பிரிவு சிறப்பு அதிகாரிகள் டாக்டர்கள் பாலாஜி, வசந்த் ஆகியோர் தலைமையிலான குழுவினர், வழுதாவூர் சாலை, கொக்குப்பார்க், மேட்டுப்பாளையம், முருகா தியேட்டர் சிக்னல் பகுதியில் டீ கடை, பெட்டி கடைகளில் சோதனையில் ஈடுப்பட்டனர்.

அப்போது, தடை செய்யப்பட்ட குட்காஉள்ளிட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா எனவும், புகையிலை பொருட்களில் எச்சரிக்கை வாசகம் பிரசுரிக்கப்பட்டு உள்ளதா என்பதை ஆய்வு செய்தனர். மேலும், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்ய கூடாது என வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



குற்ற சம்பவங்களில் தொடர்புடையை ரவுடிகளை பிடித்து போலீசார் விசாரணை நடத்திய காட்சி.

அதிகாலையில் வீட்டில் தூங்கி கொண்டிருந்த

60 ரவுடிகளை தட்டி தூக்கிய போலீசார்

கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல்

திருநள்ளாறு, நவ.11– அதிகாலை நேரத்தில் வீட்டில் தூங்கி கொண்டிருந்த 60 ரவுடிகளை போலீசார் தட்டித் தூக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அவர்களிடம் இருந்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆபரேஷன் திரிசூலம்

புதுச்சேரியில் குற்ற சம்பவங்களை தடுக்கவும், ரவுடிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும் ஆபரேஷன் திரிசூலம் என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் படி ரவுடிகளின் வீடுகளில் போலீசார் அடிக்கடி சோதனை செய்து ஆயுதங்களை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இனம் புதுவையில் ரவுடிகளின் வீடுகளில் போலீசார் அதிரடியாக சோதனை செய்தனர். அதில் 55 ரவுடிகளை போலீசார் கைது செய்தனர்.

அதிரடி சோதனை

அதன் தொடர்ச்சியாக காரைக்கால் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கப்பிரமணியன் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் புருஷோத்தமன், மரிய கிறிஸ்டின் பால் மற்றும் போலீசார் நேற்று காரைக்கால் நகர், லெமர் வீதி, பஸ் நிலையம், காமராஜர் சாலை பகுதியில் ரவுடிகளின் வீடுகளில் நேற்று அதிகாலை 4 மணியளவில் அதிரடி சோதனை செய்தனர்.

அதேபோல் திருபட்டினம், திருநள்ளாறு உள்ளிட்ட பகுதிகளில் அந்தந்த பகுதி போலீசார் சோதனை செய்தனர். போலீசாரின் அதிரடி சோதனையில் வீடுகளில் ஆயுதங்கள் எதுவும் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் எதுவும் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என சோதனை செய்தனர்.

60 பேர் சிக்கினர்

அப்போது குற்ற சம்பவங்களில் தொடர்புடைய 60 பேர் போலீசாரின் பிடியில் சிக்கினர். அதில் 3 பேர் கோர்ட்டு பிடிவாரண்டு பிறப்பித்து தலைமறைவாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களிடம் இருந்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

அதிகாலை நேரத்தில் வீட்டில் அயர்ந்து தூங்கி கொண்டிருந்த ரவுடிகளை போலீசார் தட்டி தூக்கிய சம்பவம் காரைக்காலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ரூ.1.20 லட்சம் போதை பொருள் பறிமுதல்; ஒருவர் கைது

புதுச்சேரி, செப். 1– முத்தியால்பேட்டையில் விற்பனைக்கு வைத்திருந்த ரூ.1.20 லட்சம் மதிப்பிலான போதை பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

புதுச்சேரியில் போதை பொருட்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். முத்தியால் பேட்டை குருசுக்குப்பம் பாப்பம்மாள் கோவில் தெருவில் போதை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு தகவல் வந்தது.

இதையடுத்து, சப் இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசம் மற்றும் போலீசார் அங்கு விரைந்து சென்று போதை பொருட்களை விற்பனை செய்த பாப்பம்மாள் கோவில் தெருவை சேர்ந்த ரஜத் குமார் திக்ஷித், 32; என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பிலான போதை பொருட்கள் மற்றும் ரூ.10 ஆயிரத்து 100 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவரை போலீசார் கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்கினர்.



■ முத்தியால்பேட்டையில் போதை பொருட்கள் விற்ற ரஜத் குமார் திக்ஷித்தை போலீசார் கைது செய்தனர்.

நகரில் விதிமீறி ஓட்டப்பட்ட 20 இ-பைக்குகள் பறிமுதல்



▶ புதுச்சேரி நகர பகுதியில் ஓடிய இ-பைக்குகளை போக்குவரத்து போலீசார் பறிமுதல் செய்து காவல் நிலையத்துக்கு கொண்டு வந்தனர். அதனை சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி, எஸ்பி செல்வம் பார்வையிட்டனர்.

போக்குவரத்து போலீசார் அதிரடி

புதுச்சேரி, நவ. 17: புதுச்சேரியில் தாறுமாறாக அதிவேகத்தில் இருசக்கர வாகனத்தில் செல்வதும், ஒரே பைக்கில் 3 பேர் சென்று விபத்தை ஏற்படுத்தும் சம்பவங்களும், ஒன்வேயில் செல்வதும், மதுபோதையில் வாகனங்களை ஓட்டுவதும் அதிகரித்து வருகிறது. சாலை விதிகளை மதிக்காமல் விதிமீறி செயல்படும் இதுபோன்ற நபர்களால் சாலைகளில் ஒழுங்காக செல்வோரும் பாதிக்கப்படுகின்றனர். பைக் மட்டுமின்றி இப்போது ஸ்கூட்டர்களிலும் தாறுமாறாக செல்கின்றனர். பேட்டரி ஸ்கூட்டர்களும் இதில் விதிவிலக்கு அல்ல. அதை ஓட்டுவோரும் அதிவேகத்தில் செல்லும் நிலையுள்ளது.

இந்நிலையில் தற்போது இ-பைக்எனப்படும் பச்சை நிற வாகனங்கள் புதிதாக வாடகைக்கு விடப்படுகின்றன. ஜிபிஎஸ் சிஸ்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதால் இந்த வாகனத்தை எங்கு வேண்டுமானாலும் எடுத்து விடும்வசதி உள்ளது. ஒருவர் மட்டுமே செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இ-பைக்கில் விதியை மீறி 2 பேர் செல்கின்றனர். மேலும், குறுக்கும், நெடுக்குமாக தாறுமாறாக செல்வதால் விபத்து ஏற்படுவதாக போக்குவரத்து போலீசாருக்கு புகார்கள் சென்றன. மேலும், இந்த வாகனங்கள் சைக்கிளாகவும் இல்லாமல், ஸ்கூட்டராகவும் இல்லாமல் எந்த வகையில் சேர்ப்பது என குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த இ-பைக்கில் சேசிஸ் நம்பர், நம்பர் பிளேட் பதிவெண் என எதுவும் இல்லை. விபத்து ஏற்பட்டால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து பல்வேறு புகார்களை தொடர்ந்து, போக்குவரத்து சீனியர் எஸ்பி பிரவீன்குமார் திரிபாதி உத்தரவின்பேரில் எஸ்பி செல்வம் தலைமையில் இன்ஸ்பெக்டர் நாகராஜ் தலைமையிலான போக்குவரத்து போலீசார் நகரப்பகுதி முழுவதும் நேற்று அதிரடி வேட்டை நடத்தினர். விதிமீறி இயங்கிய 20க்கும் மேற்பட்ட இ-பைக்குகளை பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். போக்குவரத்து துறையுடன் ஆலோசித்து இந்த இ-பைக்குகளை வரைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சாதனை போலீசாருக்கு கவர்னர் பாராட்டு



■ புதுச்சேரி ஹெரிடேஜ் ரவுண்ட் டேபிள் சார்பில், முதலியார்பேட்டையில் நடந்த விழாவில், சாதனை போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ்களை கவர்னர் கைலாஷ்நாதன் வழங்கினார். அருகில் அமைச்சர் நமச்சிவாயம், சம்பத் எம்.எல்.ஏ., டி.ஜி.பி., ஷாலினி சிங், ஐ.ஜி., அஜித்குமார் சிங்கால், சேர்மன் குணால் சவுத்ரி மற்றும் அசோகன்.

புதுச்சேரி, நவ. 22– புதுச்சேரியில் சாதனை புரிந்த போலீசாருக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை கவர்னர் கைலாஷ்நாதன் வழங்கினார்.

புதுச்சேரி ஹெரிடேஜ் ரவுண்ட் டேபிள் சார்பில், காக்கி உடை வீரர்கள் விழா, முதலியார்பேட்டை பகுதியில் நடந்தது. விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, சிறப்பாக பணியாற்றி பல்வேறு சாதனைகளை புரிந்த போலீசாருக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி கவுரவித்தார்.

விழாவில் அமைச்சர் நமச்சிவாயம், சம்பத் எம்.எல்.ஏ., டி.ஜி.பி., ஷாலினி சிங், ஐ.ஜி., அஜித்குமார் சிங்ளா, டி.ஐ.ஜி.,கள் சத்திய சுந்தரம், பிரிஜேந்திர குமார் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

கோரிமேடு மைதானத்தில் மரக்கன்று நடும் விழா

புதுச்சேரி, நவ. 7– புதுச்சேரி வனத்துறை சார்பில் மத்திய அரசு அறிவித்துள்ள தாயின் பெயரில் ஒரு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தின் கீழ், மரக்கன்று நடும் விழா கோரிமேடு போலீஸ் மைதானத்தில் நேற்று நடந்தது. போலீஸ் ஐ.ஜி., அஜித் குமார் சிங்கலா, வனத்துறை அதிகாரி அருள்ராஜ் தலைமை தாங்கி, மரக்கன்றுகள் நட்டனர்.

வனத்துறை அதிகாரி அருள்ராஜ் கூறுகையில், 'தாயின் பெயரில் ஒரு மரம்' என்ற திட்டத்தின் கீழ், போலீஸ் நிலையங்களில் 1,000 மரக்கன்றுகள் பயிரிடப்படுகிறது. இதுபோன்ற மரக்கன்றுகள் மூலம் நடப்படுகிறது. இதுபோன்ற புதுச்சேரியில் தொடர்ந்து மரக்கன்றுகளை நட முடிவு செய்துள்ளோம்' என்றார்.

காவலர் பயிற்சி பள்ளி எஸ்.பி., ரங்கநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். போலீஸ் பயிற்சி பள்ளிக்கு புதிதாக தேர்வாகி பயிற்சிக்கு வந்துள்ள மணிகாவல்படை வீரர்கள் போலீஸ் மைதானத்தை சுற்றி மரக்கன்றுகளை நடும் பணியில் ஈடுபட்டனர்.



■ ஒரு தாய்க்கு ஒரு மரம் என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வனத்துறை சார்பில், கோரிமேடு காவலர் பயிற்சி பள்ளி வளாகம் அருகே நடந்த நிகழ்ச்சியை ஐ.ஜி., அஜித் குமார்சிங்ளா மரக்கன்று நட்டு தொடங்கி வைத்தார்.

Police arrest six, execute three non-bailable warrants during surprise raid in U.T.

Security proceedings were initiated against 46 persons for likelihood of breach of public safety during operation Trishul, a special drive against anti-social elements in Puducherry

The Hindu Bureau
PUDUCHERRY

Puducherry police on Saturday arrested six persons, executed three long pending non-bailable warrants and initiated security proceedings against 46 persons, under the provisions of Bharatiya Nagarik Suraksha Sanhita as part of operation Trishul, a special drive against anti-social elements.

Senior Superintendent of Police, Law and Order, R. Kalaivanan in a release said around 250 police personnel were deployed in several areas of Puducherry on Saturday morning to check the activities of anti-social elements.

Searches were conducted at the houses of 260 history-sheeters during the surprise raid, the release said. Five persons were arrested under provisions of Arms Act, another person under Narcotic Drugs and Psychotropic Substances Act for possession of ganja and three non-bailable warrants executed.

Security proceedings were initiated against 46 persons for likelihood of breach of public safety during the special drive.

Deputy Inspector General of Police Sathyasundaram supervised the operations, the release added.



Around 250 police personnel were deployed in several areas of Puducherry on Saturday morning to check the activities of anti-social elements, according to Senior Superintendent of Police, Law and Order, R. Kalaivanan SPECIAL ARRANGEMENT

போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை

மைக் மூலம் எச்சரிக்கும் போலீசார்

புதுச்சேரி, நவ. 16: புதுச்சேரியில் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து கொண்டு செல்கிறது. இதனால் தினந்தோறும் ராஜீவ்காந்தி சதுக்கம், இந்திரா காந்தி சதுக்கம், மரப்பாலம் சந்திப்பு, நெல்லித்தோப்பு சந்திப்பு உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவிக்கின்றன. இதனால் வாகன ஓட்டிகள் நெரிசலில் சிக்காமல் இருக்க போக்குவரத்து விதிகளை மீறி செல்கின்றனர். குறிப்பாக ராஜீவ்காந்தி சதுக்கம், இந்திரா காந்தி சதுக்கத்தில் சிக்னலில் காத்திருக்காமல் எதிர் திசையில் செல்வது, ஃப்ரீலெப்ட் வழியாக தவறான திசையில் வாகன ஓட்டிகள் செல்வது தொடர்கதையாக உள்ளது. இது போன்று போக்குவரத்து விதிகளை மீறி வருபவர்களை



▶ ராஜீவ் காந்தி சதுக்கத்தில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை மைக் மூலம் எச்சரிக்கை செய்யும் போக்குவரத்து காவலர்.

இந்நிலையில் ராஜீவ் காந்தி சதுக்கத்தில் உள்ள 5 சந்திப்புகளிலும் ஒலி பெருக்கி அமைக்கப்பட்டது. இதன்மூலம் சிக்னலில் போக்குவரத்து விதிகளை மீறி வருபவர்களை குறித்து கொண்டு அபராதம் விதித்து வருகின்றனர். தொடர்ந்து இருக்கராவாகனத்தில் செல்பவர்கள் கட்டாயம்ஹெல்மெட் அணிய வேண்டும். மது அருந்தி வாகனத்தை இயக்கக்

புதுவையில் கடைக்குள் புகுந்து

வாலிபர்களுக்கு கொலை மிரட்டல் சுற்றுலா பயணி அதிரடி கைது

குடிபோதையில் செய்ததாக வாக்குமூலம்

புதுச்சேரி, நவ. 11: புதுச்சேரி வள்ளலார் சாலையில் உள்ள பேஷன் ஜுவல்லரி கடை முன்பில் நேற்று முன்தினம் வாலிபர் ஒருவர் குடிபோதையில் கடைக்குள் அத்துமீறி நுழைந்து அங்கு பணியில் இருந்த பெண்ணிடம் தகாத வார்த்தைகளால் பேசி கேட்டு தகராறு செய்துள்ளார். மேலும் இச்சம்பவம் குறித்து கடையிலிருந்த சிசிடிவி கேமராட்சி சமூக வலைதளத்தில் வைரலாகியது.

அதில் அந்த நபரிடம் வெளியே போங்கண்ணா... என கடையில் வேலை பார்க்கும் பெண்கள் கெஞ்சினாலும், அதை அந்த நபர் காதில் வாங்காமல் வாலிபர் ஒருவர் இந்த காட்சிகள் கடையில் இருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி இருந்தது. இச்சம்பவம் குறித்து அரியாங்குப்பம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் பெரியகடை போலீசார் வழக்குப்பதிந்து, அங்குள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு நடத்தினர். இதை தொடர்ந்து கடையில் புகுந்து ரகளை செய்த நபரை பிடித்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், சென்னை செங்



▶ கடைக்குள் புகுந்து தகராறு செய்த சுற்றுலா பயணியை போலீசார் கைது செய்தனர்.

'பெண்கள் நம் நாட்டின் கண்கள்' சுற்றுலா பயணி மன்னிப்பு வீடியோ

பெரியகடை போலீசார் வெளியிட்டுள்ள வீடியோவில், கைது செய்யப்பட்ட பழனி பேசும்போது, சென்னையிலிருந்து நேற்று (நேற்று முன்தினம்) புதுவைக்கு வந்தேன். அப்போது அதிக மதுபோதையில் நகரப்பகுதியில் உள்ள ஒரு கடைக்கு சென்று, அங்குள்ள 3 பெண் ஊழியர்களிடம் தப்பாக பேசிவிட்டேன். இதுபோன்ற சம்பவம் மீண்டும் நடைபெறாது என்றும், அந்த 3 பெண்களிடம் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். தொடர்ந்து புதுவைக்கு வரும் சுற்றுலா பயணிகள், இதுபோன்ற செயல்களில் ஈடுபடவேண்டாம். பெண்கள் நம் நாட்டின் கண்கள். என்னை மன்னித்து விடுங்கள், என பேசியுள்ளார்.

பழனி (43) என்பதும், புகைப்பட கலைஞராக இவர் வந்த போது மதுபோதையில், பேஷன் ஜுவல்லரி கடைக்குள் புகுந்து தகராறு செய்தது தெரியவந்தது. இதைதொடர்ந்து போலீசார் அவர் மீது வழக்குப்பதிந்து, அவரை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு காலாப்பட்டு மத்திய சிறை

போக்குவரத்து போலீசாருக்கு ஒளிரும் கவச உடை வழங்கல்

பாகூர், நவ. 16– திருமாம்பாக்கம் போக்குவரத்து போலீசாருக்கு, ஒளிரும் கவச உடை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. போக்குவரத்து போலீஸ் சார்பில் தலைக்கவசம் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், போக்குவரத்து எஸ்.பி., மோகன்குமார் ஏற்பாட்டின் பேரில், பாண்டிச்சேரி ஹெரிடேஜ் லேடீஸ் சர்க்கிள் 187 என்ற அமைப்பு, திருமாம்பாக்கம் பெருக்கு போக்குவரத்து போலீசாருக்கு, ஒளிரும் கவச உடை மற்றும் கையுறைகளை வழங்க முன்வந்தது. இதனை போலீசாருக்கு வழங்கும் நிகழ்ச்சி, திருமாம்பாக்கம் போக்குவரத்து போலீஸ் நிலையத்தில் நடந்தது. போக்குவரத்து போலீஸ் சர்க்கிள் 187 தலைவி தாமரை, எஸ்.பி., பிரவின்குமார் திபிரபாதி கலந்து கொண்டு, ஒளிரும் கவச உடை மற்றும் கையுறைகளை, போக்குவரத்து போலீசாருக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் போக்குவரத்து எஸ்.பி., மோகன்குமார், இன்ஸ்பெக்டர் கணேசன், சார்பு இன்ஸ்பெக்டர் பாலகுரன், சத்திரசேகரன், பாண்டியன், சேரி ஹெரிடேஜ் லேடீஸ் சர்க்கிள் 187 சேர்மன் அக்ஷயா உட்பட பலர் பங்கேற்றனர்.



■ திருமாம்பாக்கம் போக்குவரத்து போலீசாருக்கான, ஒளிரும் கவச உடைகளை பாண்டிச்சேரி ஹெரிடேஜ் லேடீஸ் சர்க்கிள் 187 – அமைப்பின் நிர்வாகிகள் சீனியர் எஸ்.பி., பிரவின்குமார் திரிபாதியிடம் ஒப்படைத்தனர். அருகில், எஸ்.பி. மோகன்குமார், இன்ஸ்பெக்டர் கணேசன்.

மின்வயர் எரிந்து கருகியது

ராஜீவ்காந்தி சதுக்கத்தில் பழுதடைந்த சிக்னல் சீரமைப்பு



▶ பழுதடைந்த புதுச்சேரி ராஜீவ்காந்தி சிக்னலை போக்குவரத்து இன்ஸ்பெக்டர் சுரேஷ்பாபு தலைமையிலான போலீசார் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி, ஜன. 4: புதுவையில் போக்குவரத்து நெரிசல்கள் அண்டு தோறும் அதிகமாகி வருகின்றன. இதனால் முக்கிய சந்திப்புகளில் மேம்பாலங்கள் அமைக்க மாநில அரசு திட்டமிட்டு அதற்கான நிதியுதவிகளை மத்திய அரசிடம் கோரியுள்ளது. இதனிடையே புதுவை நகரின் முக்கிய சந்திப்புகளில் ஒன்றாக இருக்கும் சிக்னல்கள் பழுதடைந்து வருவதால் அவற்றை தற்போதைய போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு சீரமைக்க வேண்டுமென வும் கோரிக்கை எழுந்தன.

இதன் காரணமாக முக்கிய சந்திப்புகளில் இருந்த சிக்னல்கள் அகற்றப்பட்டு சாலை விரிவாக்கம் செய்யப்பட்டு

பல்கலை.யில் ஊடுருவ முயன்ற 4 பேர் கைது

கடலோர காவல் நிலையங்களில் தீவிர சோதனை



"சாகர் கவச்" பாதுகாப்பு ஒத்திகையின் ஒரு பகுதியாக புதுச்சேரி தெங்காய்திட்டு துறைமுகத்தில் துப்பாக்கி ஏந்திவரு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அடுத்தபடம்: காலாப்பட்டில் உள்ள பல்கலைக்கழகம் அருகே தீவிரவாதிகள் போல் சாதாரண உடையணிந்து ஊடுருவ முயன்ற கடலோர காவல் படையைச் சேர்ந்த 4 பேர்.

புதுச்சேரி,செப். 5: புதுச்சேரி யில் சாகர் கவச் ஒத்திகை யின்போது காலாப்பட்டில் உள்ள பல்கலைக்கழகம், அருகேநீரிவாதிகள்போல் சாதாரண உடையணிந்து ஊடுருவ முயன்ற 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

முப்படைகளுக்கு 2008ம் ஆண்டு கடல்வழிதாக்குதல் நடந்தேறடுத்தப்பட்டோர் பாதுகாப்பை மேம்படுத்தும் விதமாக சாகர் கவச் எனப்படும் பாதுகாப்பு ஒத்திகை நேற்று தூத்த நிட்டப்பட்டது. அதன்படி நீரிவாதிகள் ஊடுருவலை தடுக்கும் வகையில், ஆண் டிற்கு இருமுறை முழு சாகர் கவச் சோனைப்பும் கடலோர பாதுகாப்பு ஒத்திகை நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

காலவலுதலுவினரே மாறுவேடத்தில் கடற இடங்களில் நுழமுயர்ச்சன். அவர்களை பாதுகாப்பு படையினரே பல குழுக்களா கப்பிரிந்து தடுத்து தாக்குதல் நடைபெறுவதை முறியடிப் பது போன்றவைகள் இந்த பாதுகாப்பு ஒத்திகைகளில் நடைபெறும். அந்த வகை யில், இந்த ஆண்டிற்கான பாதுகாப்பு ஒத்திகை கடலோர மாவட்டத்தில் நேற்று காலை 8மணிமுதல் மதியம் 2மணி வரை நடைபெற்றது.

இதில் கடலோர காவல் படை, கடலோர பாது காப்பு குழுமம், கடலோர மாவட்ட காவல் துறை, மீன்வளத்துறை, மீனவர் நலத்துறை, துறைமுகம், சுங்கத்துறை, மீன்பிடி துறைமுகம், அரசு கட்டிடங் கள், கலங்கரை விளக்கம், சுற்றுலாத்தலங்கள், மருத்துவமனைகள், தலைமை செயலகம், பேருந்து நிலையம், ரயில் நிலையம், மீன்பிடி துறைமுகம் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் 2 நாட்கள் சாகர் கவச் என்ற கடலோர பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நேற்று காலையில் தொடங்கியது.

2 நாட்கள் நடைபெறும் இந்த ஒத்திகை நேற்று புதுச்சேரி தெங்காய்திட்டு துறைமுகத் தில் தொடங்கி கடலோர பகுதிகளில் நடைபெற்றது.

இதில் கடலோர காவல் படை காவலர்கள் என்.டி. பழனிவேல் தலைமையில் ரோந்து பணியில் ஈடுபட்ட னர். அப்போது மீன்பிடித் தடை கொண்டிருக்கும் மீன வர்கள், படகுகள் மற்றும் மீனவர்களின் அடையாளங் கள் குறித்தும் அவர்கள் எங் கிருந்து வருகிறார்கள் என் றும் கேட்டனை செய்தனர். புதுச்சேரியின் மீனவ இரா மகிகளான ஜனகெட்டிதா ன், பிரான்சுசாவது, ஜனத் திதாபம், வீராம்பட்டினம், பூனாங்குப்பம், நல்லவாடு, மூராத்துறைமுகம் உள்ளிட்ட கடலோர மீனவ கிராமங் களில் சோதனை நடத்தது. காலாப்பட்டில் நடந்த பாதுகாப்பு ஒத்திகை நேற்று மாலை 4 மணி வரை நடைபெற்றது.

பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீசாருக்கு டி.ஜி.பி., வாழ்த்து

புதுச்சேரி, நவ. 1- பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீசாருக்கு டி.ஜி.பி., சண்முகசுந்தரம் இனிப்பு கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

காவல் பணி என்பது கடுமையான பணி. தீபாவளி, பொங்கல் என்று எந்த விசேஷங்களுக்கு வீடுமுறை கிடைக்காது. புதுச்சேரியில் நேற்று தீபாவளி பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்பட்ட நிலையில், காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

தங்களது குடும்பத்துடன் நேரத்தை செலவிட முடியாமல், போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தினர்.



பகச்சேரியில் தீபாவளி பண்டிகையின் போது போக்குவரத்து சிக்னலில்

பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவலர்கள், மாணவர்களை டி.ஜி.பி., சண்முகசுந்தரம் நேற்று இனிப்பு கொடுத்து தீபாவளி வாழ்த்து தெரிவித்தார். அவர்களது பணியை பாராட்டினார்.

e personnel and students
asion of Diwali festival
e before Diwali.



சிறுவர்களை வாகனம் ஓட்ட அனுமதிக்க மாட்டோம் என்று பெற்றோர் உறுதிமொழி எடுத்ததை படத்தில் காணலாம்.

பள்ளி மாணவர்கள் ஓட்டிய 59 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

பெற்றோரை அழைத்து உறுதிமொழி ஏற்க வைத்த போலீசார்

திருள்ளாறு, செப்.13- காரைக்கால், திருள் ளாறு பகுதியில் பள்ளி மாணவர்கள் ஓட்டிய 59 மோட்டார் சைக்கிள் கள போலீசார் பறிமுதல்செய்து, அவர்க ளின் பெற்றோரை நேரில் வர வழைத்து உறுதி மொழி ஏற்க வைத்தனர்.

பள்ளி மாணவர்கள் காரைக்காலில் பள்ளி, கல்லூரிக ளுக்கு மாணவர்கள் மோட்டார் சைக்

கூடுதல் கட்டணம் வசூல் தனியார் பஸ்களில் போலீசார் ஆய்வு

பாகூர், செப். 14- பயணிகளிடம் கட்டணம் கூடுதலாக வசூலிப்பதாக எழுந்த புகாரின் பேரில், கிருமாம்பாக்கம் போக்குவரத்து போலீசார், தனியார் பஸ்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

புதுச்சேரி – கடலூர் வழித்தடத்தில் 100க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பஸ்கள் இயக் கப்பட்டு வருகிறது. இந்த வழித்தடத்தில் இயங்கும் தனியார் பஸ்களில், பயணி களிடம் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் எழுந்தது. கடலூரில் இருந்து புதுச்சேரிக்கு செல்ல 20 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கடலூரில் இருந்து திருப்பாதிரிப்புலியூர் செல்ல வேண்டுமானாலும் 20 ரூபாய் கட்டணம் செலுத்திட வேண்டும் என கேட்டு நடத்துனர், பயணிகளிடம் அடாவடி செய்வதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது குறித்து, கவர்னர் மற்றும் போக்குவரத்து துறை உயர் அதிகாரிகளுக்கு பல்வேறு புகார்கள் சென்றன. இந்நிலையில், கிருமாம்பாக்கம் தெற்கு போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலசுப் இன்ஸ்பெக்டர் கணேசன், கர் மற்றும் போலீசார் நேற்று காலை கிருமாம் பாக்கம் சந்திப்பில் அ வழியாக சென்ற தனியா பஸ்களை நிறுத்தி நிய ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, போலீசார் "பயணிகளிடம் கூடு லாக கட்டணம் கேட்க கொடுக்க வேண்டாம். நட துனர்கள் கூடுதலாக கட்ட ணம் கேட்டு தொந்தர செய்தால், போலீசாருக் தெரியப்படுத்துங்கள்.

அவர்களின் மீதும், ச மந்தப்பட்ட பஸ் நிறு னத்தின் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க படும் என்றனர்.

மேலும், பஸ் நடத்து னர்களிடம், கூடுதலா கட்டணம் வசூலிப்பதா மீண்டும் புகார் எழு தால், கடுமையான ந வடிக்கை எடுக்கப்படு எச்சரிக்கை விடுத்தனர்.



பயணிகளிடம் கட்டணம் கூடுதலாக வசூலிப்பதாக எழுந்த புகாரின் பேரில், கிருமாம்பாக்கம் போக்குவரத்து போலீசார், தனியார் பஸ்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இறந்த பிரெஞ்சு குடியுரிமை பெண்ணின்

நிலத்தை ஆள்மாறாட்டம் செய்து விற்ற மூதாட்டி அதிரடி கைது



பிரெஞ்சு குடியுரிமை பெண்ணின் நிலத்தை ஆள்மாறாட்டம் செய்து விற்ற மூதாட்டியை சிபிசிஐடி போலீசார் கைது செய்தனர்.

சிபிசிஐடி போலீசார் நடவடிக்கை

புதுச்சேரி, செப். 28: புதுச் சேரியை சேர்ந்த லோக நாதன் மனைவி கமலாட் சினி. பிரெஞ்சு குடியுரிமை பெற்றவர். அவர் இறந்து விட்டார். அவர் பேரில் கடந்த 2019ல் ஆள்மாறாட் டம் செய்து புதுச்சேரி தெங்காய்திட்டில் உள்ள அவரது 4 பிளாட்கள் விற்கப்பட்டுள்ளது. இதை தித்து பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் கமலாட் சினி மகன் கமலேசன், புதுச் சேரி சிபிசிஐடி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இவர் கனை அறிவுறுத்தலின் பேரில் எஸ்.பி. ஜித்தா கோதண்டராமன் மேற் பார்வையில் இன்ஸ் பெக்டர் பாபுஜி, எஸ்ஐ செந்தில்குமார் மற்றும் காவலர்கள் உள்ளடங்கிய சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டு விசா ரணை நடத்தினர். இதில் புதுச்சேரி முத்தியால் பேட்டை சோலைநகரை சேர்ந்த நாகமுர்த்தி மனைவி சாந்தி (62) என்பவர் மேற் படி ஆள் மாறாட்டம் செய்து மோசடி செய்தது தெரிய வந்தது. ஆனால் அவர், தனது அடையா ளத்தை மறைத்து வசித்து வந்தார். இதனை அறிந்த சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் பாபுஜி தலைமையிலான போலீசார், சாந்தியை நேற்று கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட் டில் ஆஜர்படுத்தி சிறை யில் அடைத்தனர். இவ ருக்கு மேலும் சிலர் கைது செய்யப்படுவார்கள் என போலீசார் தெரிவித்தனர்.

Police headquarters to be restored at a cost of ₹6 crore in Puducherry

After the administrative and expenditure sanctions were given by the government, the Public Works Department initiated the process of inviting tenders for the renovation work



Home Minister A. Namassivayam felicitates SSP Kalaivanan at the review meeting held on Tuesday. SPECIAL ARRANGEMENT

The Hindu Bureau
PUDUCHERRY

The Puducherry government has given the administrative sanction for the restoration of the century-old building that houses the Puducherry Police Headquarters near the Beach Promenade.

After the administrative and expenditure sanctions were given by the government, the Public Works Department initiated the process of inviting tenders for the restoration work.

The restoration would would cost the government around ₹7.85 crore, a source told *The Hindu*.

The building houses the offices of the Director General of Police and Inspector General of Police.

Relocate offices

The Police Department was in the process of identifying a suitable location to relocate the offices to facilitate the restoration of the Police Headquarters, the source said.

High-level meeting

On Tuesday, Home Minister A. Namassivayam chaired a high-level meeting at the Police Headquarters. It was the first law and order review meeting chaired by the Home Minister after senior IPS officer Shalini Singh took over as the DGP of the Union Territory.

At the meeting, the Home Minister felicitated officers attached to the Cyber Wing of the Puducherry Police for their recent crackdown on online fraudsters.

Ways to improve traffic

He then directed the police to initiate firm action against drug peddlers and history sheeters. He also discussed a project to install new signals at 34 places. The meeting further discussed ways to improve traffic management, the source said.

மும்பை போலீஸ் பேசுவதாகக்கூறி

புதுச்சேரி, தமிழகம் உள்பட பல மாநிலங்களில் ₹66 கோடி மோசடி செய்த 3 பேர் கைது

சைபர் கிரைம் போலீசார் அதிரடி



மும்பை போலீஸ் பேசுவதாக கூறி புதுச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்களில் மோசடி செய்த மேற்குவங்காளத்தை சேர்ந்த 3 பேரை சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளனர்.

'மோசடிக்காரர்களிடம் சிம்கார்டு, வங்கிக்கணக்கு கொடுத்தால் சிறை'

இதுபற்றி சைபர் கிரைம் சீனியர் எஸ்.பி. நரேந்திரன் கவுரவமே, உங்களை மிரட்டல் அழைப்பு, சொல்லுமோ... மும்பை போலீஸ் பேசுகிறோம், உங்கள் பெயரில் சட்டவிரோத பண பரிவர்த்தனை நடந்துள்ளது. உங்களுடைய வங்கி கணக்கில் சட்டத்துக்கு விரோதமான பண பரிவர்த்தனை நடந்துள்ளது. கூரியரில் உங்களுடைய பெயரில் என்னை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளது என இதுபோன்று எந்த இணையவழி மோசடி மிரட்டல் அழைப்புகள் அனைத்தும் போலியானவை. மேலும் நம்மை பணத்தை செலுத்த வேண்டும். இது சம்பந்தமாக உடனடியாக 1930 என்ற இணையவழி காவல் நிலைய இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் அல்லது https://cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் கொடுக்கலாம். மேலும், இதுபோல் வங்கி கணக்குகளை விற்கவோ, வாங்கவோ, வாடகைக்கு விடவோ வேண்டாம். மேற்படி வங்கி கணக்கு, சிம் கார்டுகள் இணையவழி மோசடிக்காகவே பயன்படுத்தப்படும். நீங்கள் சிறைக்கு செல்ல நேரிடும் என்றார்.

போது மேற்படி வங்கி கணக்கு தனது இந்தியா முழுவதும் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டு இருப்பது தெரியவந்தது.

மேலும், இவ்வழக்கில் மோசடி செய்த முழுத்தொகை பணம் பெறப்பட்ட குறிப்பிட்ட வங்கி கணக்கில் இருந்து எஞ்சிய ரூ.3 லட்சத்து 30 ஆயிரத்து 3 பேரிடம் மோசடியில் இருந்து மொத்தம் ₹66.61 கோடி மோசடி செய்துள்ளனர். இவர்கள் ஆன்லைன் மோசடி குறித்தான வங்கி கணக்குகளை அவர்களது பணம் வங்கி கணக்கு இதை பார்த்தவுடன் வங்கி கணக்கை அவர்கள் முடக்கி விட்டனர். இதனால் அவர்களால் பணம் எடுக்கவோ, ஈடுபட்டு வந்துள்ளனர். இதுபோன்று 7 பேரையும் நேற்று போலீசார் கைது செய்து, நீதிமன்ற நடுவில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கில் மேற்கொண்டு வருவதாக போலீசார் தெரிவித்தனர். இதுபோன்று சைபர் குற்றம் குறித்து புகார் தெரிவிக்க 1930 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் அல்லது https://cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகார் கொடுக்கலாம் என்று சைபர் கிரைம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

புதுச்சேரியில் பல இடங்களில் பைக்குகளை திருடிய 4 பேர் கைது

10 பைக்குகள் பறிமுதல்



முதலியார்பேட்டை பகுதியில் பைக் திருடிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். உள்படம்: உருளையன்பேட்டை பகுதியில் பைக் திருடியவரை போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி, டிச. 29: புதுச்சேரியில் முதலியார்பேட்டை, உருளையன்பேட்டை உள்ளிட்ட பல இடங்களில் பைக்குகளை திருடிய 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி முதலியார்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் நள்ளிரவு வேலராம்பேட் ஏரிக்கரையில் தீவிர ரோந்து மற்றும் கண் காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே நம்பர் பிளேட் இல்லாமல் பைக்கில் வந்த 3 பேரை பிடித்து விசாரணை நடத்தினர். அப்போது அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர்.

இதையடுத்து அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்ததில், வில்லியனூர் வி.தட்டாஞ்சாவடி மோகன் பிரசாத் (19), கோபாலன்கடை சேஷ இறி (19), வி.மணவெளி நீலமணிகண்டன் (20) என்பதும், அவர்கள் ஒட்டி வந்தது திருட்டு வந்தது மேலும் அவர்கள் பல இடங்களில் பைக்கு களை திருடியதும் கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து 3 பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடம் இருந்து 3 பைக்குகளை கைப்பற்றினர்.

இதேபோல், உருளையன்பேட்டை போலீசார் நேற்று முன்தினம் இரவு மறைமலையடிகள் சாலையில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே பைக்கில் வந்த ஒருவரை பிடித்து விசாரித்தனர். வந்தது. மேலும் அவர்கள் பல இடங்களில் பைக்கு களை திருடியதும் கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து அவரை போலீசார் கைது செய்து தனர். அவரிடம் இருந்து 7 பைக்குகளை பறிமு

சைபர் கிரைம் போலீசார் விழிப்புணர்வு



புதுச்சேரி கடற்கரை சாலையில் சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன், கீர்த்தி மற்றும் போலீசார், ஆன்லைன் குற்றங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.

புதுச்சேரி போலீசாருக்கு பேரிடர் மீட்பு பயிற்சி

புதுச்சேரி, நவ. 28–

புதுச்சேரி போலீசாருக்கு பேரிடர் மீட்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

புதுச்சேரியில் கன மழை எச்சரிக்கை தொடர்ந்து, 2 தேசிய பேரிடர் மீட்பு படை வந்தது. இதில், ஒன்று காரைக்காலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புயல் மழை வெள்ளம் வரும் பேரிடர் காலத்தில் போலீசார் மீட்பு பணியில் ஈடுபடும் போது மின்பற்ற வேண்டிய அடிப்படை பயிற்சி கள் குறித்து நேற்று பயிற்சி அளிக்கப்பட்டது.

சமுதாய நல கூடத்தில் நடந்த பயிற்சியில் எஸ். பி.,க்கள் ரங்கநாதன், விரவல்லவன், ஐ.ஆர்.பி.எஸ்., உதவி கமாண்டன்ட் கார்த்திகேயன், இன்ஸ்பெக்டர் பாலமுருகன் கலந்து கொண்டனர். பேரிடர் மீட்பு பயிற்சி பெற்ற ஐ.ஆர்.பி.எஸ்., காவலர்கள், ஆயுதப்படை மற்றும் சட்டம் ஒழுங்கு போலீசாரும் பங்கேற்றனர்.



கோரிமேடு போலீஸ் சமுதாய நலக்கூடத்தில் பேரிடர் மீட்பு படையினர், புதுச்சேரி போலீசாருக்கு பேரிடர் மீட்பு பயிற்சி அளித்தனர்.

போக்குவரத்து தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளித்த

வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட் பரிசு

புதுச்சேரி, டிச.29-

புதுச்சேரியில் வருகிற ஜனவரி 12–ந் தேதி முதல் இருசக்கர வாகனங்கள் செல்வோர் கட்டாயமாக ஹெல்மெட் அணிய வேண்டும் என உத்தரவி டப்பட்டுள்ளது. இதையொட்டி புதுச்சேரி போக்குவரத்து போலீசார் சார்பில் புதுச்சேரி ராஜீவ்காந்தி சிலை அருகே நேற்று விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு புதுச்சேரி போக்குவரத்து சீனியர் போலீஸ் சூப்பி ரண்டு பிரவீன்குமார் திரிபாதி தலைமை தாங்கினார். போலீஸ் சூப்பிரண்டு செல்வம் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியையொட்டி அந்த வழியாக வந்த இருசக்கர வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்து தொடர்பான கேள் விகள் கேட்டு சரியான பதில் அளித்தவர்களுக்கு இலவசமாக ஹெல்மெட் வழங்கப்பட்டது. இதில் 20–க்கும் பேருக்கு ஹெல்மெட் வழங்கப்பட்டது.

கடல் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்க

புதுச்சேரியில் சீ விஜில் பாதுகாப்பு ஒத்திகை

● போலீசார் தீவிர கண்காணிப்பு, வாகன சோதனை

புதுச்சேரி, நவ. 21: கடல் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்க புதுச்சேரியில் சீ விஜில் பாதுகாப்பு ஒத்திகை நடந்தது. இதில் போலீசார் தீவிர வாகன சோதனை மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் மும்பை பகுதியில் கடந்த 2008ம் ஆண்டு கடல் வழியே பயங்கரவாதிகள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர். இத்தகைய கடல் வழி ஊடுருவலை தடுக்க நாடு முழுவதும் கடலோர பகுதிகளில் ஆண்டுதோறும் சீ விஜில் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. காவல்துறையினரே மாறுவேடங்களில் கடற்கரை மற்றும் முக்கிய இடங்களில் நுழைவார்கள். அவர்களை பாதுகாப்பு படையினர் பல குழுக்களாகப் பிரித்து தடுத்து தாக்குதல் நடைபெறுவதை முறியடிப்பது போன்றவைகள் இந்த பாதுகாப்பு ஒத்திகையில் நடைபெறும்.

இந்நிலையில் இந்தாண்டுக்கான சீ விஜில் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நாடு முழுவதும் 20ம், 21ம் தேதி நடக்கிறது. அதன்படி புதுவையில் 19 மீனவ கிராமங்களில் சீ விஜில் என்ற பெயரில் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நேற்று காலை 6 மணிக்கு தொடங்கியது. புதுச்சேரி தெற்கு மாவட்ட எஸ்.பி. கலைவாணன், ஒயர்லெஸ்சால் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் மற்றும் கடலோர காவல் படை போலீசார் படகு மூலம் கடலில் சோதனை செய்தனர். அப்போது கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகுகளில் ஏறி சோதனை செய்தனர். தொடர்ந்து கடலில் சந்தேகப்படும்படியாக படகு வந்ததோ அல்லது மர்ம நபர்கள் தென்பட்டாலோ உடனே கடலோர பாதுகாப்பு படை போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இதில் கடலோர காவல் படை போலீசார், மீனவ கிராம நிர்வாக அதிகாரிகள், மீனவர்கள் கலந்து கொண்டனர்.



▶ தேங்காய்திட்டு துறைமுக பகுதியில் கண்காணிப்பு பணி மேற்கொண்ட கடலோர காவல்படை போலீசார்.



▶ காலாப்பட்டு அருகே விழுக்கு கடற்கரை சாலையில் வாகன சோதனை நடத்திய போலீசார்.

டன. தொடர்ந்து புதுவை சட்டசபை நுழைவு வாயில் முடப்பட்டு பொதுமக்கள் நீலிர சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இந்த பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி நாளை மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

கலைப்பு: இதேபோல் புதுச்சேரி - சென்னை இழக்கு கடற்கரை சாலை காவல்பட்டு கடலோர காவல் படை போலீசார் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கடலோர காவல் படை போலீசார் மற்றும் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் நீலிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் பகுதிகளில் தமிழக போலீசார் நீலிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் இழக்கு கடற்கரை சாலையில் நீலிர வாகன சோதனையும் போலீசார் ஈடுபட்டனர்.

டீ வியாபாரி கொலை வழக்கில் ரவுடி, சிறுவன் உட்பட 7 பேர் கைது



■ மேட்டுப்பாளையத்தில் டீ வியாபாரி பாபு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை எஸ்.பி.வீரவல்லபன் தலைமையில் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி, செப். 28– மேட்டுப்பாளையத்தில் டீ வியாபாரியை வெட்டி கொலை செய்த ரவுடி மற்றும் 17 வயது சிறுவன் உட்பட 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

மேட்டுப்பாளையம் சாணரப்பேட்டையை சேர்ந்தவர் பாபு (எ) பாபு,44; தொழிற்சாலை களுக்கு ஒப்பந்த அடிப்படையில், 'டீ' வியாபாரம் செய்து வந்தார். நேற்று முன்தினம் மேட்டுப்பாளையம் தொழிற்பேட்டையில் உள்ள கூட்டரில் சென்ற, பாபுவை, 5 பேர் கொண்ட கும்பல் வழிமறித்து வெட்டி கொலை செய்தது.

மேட்டுப்பாளையம் போலீசார் வழக்கு பதிந்து, எஸ்.பி., வீரவல்லபன் தலைமையில், இன்ஸ் பெக்டர் பாலமுருகன், எஸ்.ஐ., சந்திரசேகரன் அடங்கிய குழுவினர் தீவிர விசாரணை நடத்தினர்.

அதில் பாபுவை, ரவுடி புளியங்கொட்டை (எ) ரங்கராஜன் தலைமையிலான கும்பல் கொலை செய்தது தெரிய வந்தது.

அதனையொட்டி, திருவக்கரை கல்குவாரி அருகே பதுங்கியிருந்த ரவுடி ரங்கராஜன்25; பிள்ளு (எ) பிரதீஷ்,21; வழுதாவூர் விஜித் (எ) அவித், 23; தொண்டமாநத்தம் சரவணன், 21; சாணரப்பேட்டை ராதேஜஸ், 25; சூர்யா (எ) ஜெயசூர்யா, 21; மற்றும் 17 வயது சிறுவன் ஆகிய 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

தொடர் விசாரணையில், ரவுடி ரங்கராஜன் மீது 2 கொலை உள்ளிட்ட 13 வழக்கு உள்ளது. இவருக்கும், பாபுவிற்கும் முன் இருந்த முன்விரோதம் காரணமாக பாபுவை கொலை செய்தது தெரிய வந்தது.

இந்நிலையில் கடந்த வாரம் நடந்த கோவில் திருவிழா பாட்டு கச்சேரியில் ரங்கராஜனின் கூட்டாளியான புல் (எ) பிரதீஷ் நடனமாடியதை, பாபு கண்டித்தார்.

ஆத்திரமடைந்த பிரதீஷ் தனது கூட்டாளியான ரங்கராஜன் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து, ம பாபுவை கொலை செய்தது தெரிய வந்தது.

இதனையடுத்து 7 பேரையும் கைது செய்யப்பட்டனர். மேலும், எங்களை பாபு அடக்கி வைக்க முயன்றதால், வெட்டி கொலை செய்ததாக கூறியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7 பேரையும் நேற்று கோர்ட்டில் ஆஜர்படுத்தி, ரங்கராஜன் உள்ளிட்ட 6 பேரை காவலில் எடுத்து விசாரணை நடத்த அனுமதி வழங்கினர். 17 வயது சிறுவனை ஆர்டோக்கு இல்லத்திலும்

டிராபிக் போலீசாருக்கு நுரையீரல் பரிசோதனை விழிப்புணர்வு முகாம்



■ புதுச்சேரி போக்குவரத்து போலீசாருக்கு நுரையீரல் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் சீனியர் எஸ்.பி., பிரவீன்குமார் திரிபாதி தலைமையில் நடந்தது.

புதுச்சேரி, செப். 27– இழக்கு போக்குவரத்து போலீஸ் சார்பில், டிராபிக் சிக்னலில் பணியாற்றும் காவலர்களுக்கு நுரையீரல் பரிசோதனை மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று நடந்தது.

போலீஸ் துறையில் போக்குவரத்து ஸ்டேஷன்களில் பணியாற்றுவதும், சிக்னலில் பணியாற்றுவது சவாலானது.

புகை கக்கும் வாகனங்கள், ஒயாத இரைச்சல் சிக்னல்களில் ஒரு மணி நேரம் இருந்தாலே, முகங்களில் கரும்புகை படலங்கள் படிந்து விடும். முகக் கவசம் இன்றி நாள் முழுதும் சிக்னலில் நிற்கும் போக்குவரத்து போலீசாருக்கு, காற்றில் கலக்கும் நுண் துகள்கள் நேடியாக சுவாசித்து நுரையீரலை பாதிக்கிறது.

இதனால் புதுச்சேரி இழக்கு போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் அனைத்து போக்குவரத்து போலீசாருக்கும் நுரையீரல் பரிசோதனை மற்றும் மருத்துவ முகாம் நேற்று நடந்தது. நேரு வீதி இழக்கு போக்குவரத்து போலீஸ் நிலைய வளாகத்தில் நடந்த பரிசோதனை முகாமில், போக்குவரத்து சீனியர் எஸ்.பி., பிரவீன் குமார் திரிபாதி தலைமை தாங்கினார். எஸ்.பி., செல்வம், இன்ஸ்பெக்டர் நாகராஜன் முன்னிலை வகித்தனர்.

சப்இன்ஸ்பெக்டர் குமார் உள்ளிட்ட போலீசார் கலந்து கொண்டனர். லட்சுமிநாராயணா மருந்துவ கல்லூரி டாக்டர் ஜஸ்வர்யா ஸ்ரீவிசாஸ் குழுவினர், போக்குவரத்து போலீசாருக்கு நுரையீரல் பாதிப்புகள் குறித்து பரிசோதனை நடத்தி ஆலோசனைகள் வழங்கினர். சிக்னலில் பணியாற்றும் போலீசாருக்கு எஸ்.95 முகக்கவசமும் வழங்கப்பட்டது.

உண்டியல் உடைத்து திருடிய ஆசாமிகளை பொதுமக்கள் பிடித்து போலீசில் ஒப்படைப்பு



■ மேரி உழவர்கரை முத்துமாரியம்மன் கோவில் உண்டியல் உடைத்து திருடிய மூவரை ரெட்டியார் பாளையம் போலீசார் கைது செய்து உண்டியலை பறிமுதல் செய்தனர்.

புதுச்சேரி, நவ. 9– மேரிஉழவர்கரையில் கோவில் உண்டியல் உடைத்து திருடிச் சென்ற மூவரை பொதுமக்கள் துரத்தி பிடித்து போலீசில் ஒப்படைத்தனர்.

புதுச்சேரி மேரிஉழவர்கரையில் முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவில் வளாகத்தில் நேற்று காலை 8:30 மணிக்கு அடையாளம் தெரியாத 3 பேர் சந்தேகத்திடமாக சுற்றித்திருந்தனர். அடுத்த சில நிமிடத்தில் கோவில் வளாகத்தில் வைக்கப்பட்டு இருந்த உண்டியலை உடைத்து சாக்கு பையில் வைத்து கொண்டு மூவரும் வெளியேறினர்.

இதை பார்த்த அப்பகுதியைச் சேர்ந்த தமிழ் வேந்தன் கூச்சலிட்டார். பொதுமக்கள் திரண்டு தப்பியோடிய மூவரை துரத்தினர். இதில் இருவர் மட்டும் சிக்கி கொண்டர். பொதுமக்கள் இரவு கயிலம்பாலையைச் சேர்ந்த ரையும் பிடித்து ரெட்டி மண்கண்டன், 31; எஸ்பயார்பாளையம் போலீசாரும், இவர்கள் கோவில் ரிடம் ஒப்படைத்தனர். உண்டியலை திருடியது விசாரணையில், நாமக்கல் தெரிய வந்தது. மேலும் சேத்தமங்கலம், பெரு தப்பியோடிய நாமக்கல் மான் கோவில் வீதியைச் பெரியசாமி, 34; போலீ சேர்ந்த அஜித், 22; திரு சார் கைது செய்தனர். மூர்கவுடன்பாளையம், போலீஸ் மேலும் விசாரணை செய்ததில் கைது செய்யப்பட்ட மூவரும் சென்னை பதிபேடு, குமலன்சாவடியில் தங்கி கட்ட கூலிவேலை செய்து வருவதும், மூலக்குளத்தில் வசிக்கும் மணிகண்டனின் தம்பி ஆறுமுகம் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். ஆறு முகத்தை காண புதுச்சேரி வந்த அஜித், மணிகண்டன், பெரியசாமி மூவரும் 2 நாட்களாக மேட்டுப்பாளையம் சாராயக்கடையில் குடித்துள்ளனர். நேற்று காலை ஊருக்கு திரும்பிச் செல்ல மூவரிடமும் காசு இல்லை. இதனால் முத்துமாரியம்மன் கோவில் உண்டியல் உடைத்து திருடிச்செல்லும் முயற்சியில் பொதுமக்களிடம் சிக்கியதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட மூவரும் நீதிபதி முன் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.

₹60 லட்சம் செல்போன்களை மீட்டு உரியவரகளிடம ஒப்படைப்பு

3,712 புகார்களில் ₹35.18 கோடி இழப்பு ₹8.81 கோடி உடனடியாக மீட்பு

சீனியர் எஸ்.பி. கலைவாணன் பேட்டி

புதுச்சேரி, செப். 27: புதுச்சேரியில் கடந்த 3 மாதங்களில் தலைமைச் செயலகம் மற்றும் 4 காவல் நிலையங்களில் பதிவான புகார்களின் அடிப்படையில் 250 செல்போன்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதுதொடர்பாக சீனியர் எஸ்.பி. கலைவாணன் பேட்டி அளித்தார்.



புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் தவறவிட்ட 250 செல்போன்களை மீட்டு உரியவர்களிடம் சீனியர் எஸ்.பி. கலைவாணன் ஒப்படைத்தார். அருகில் சைபர் கிரைம் எஸ்.பி. பாஸ்கரன், இன்ஸ்பெக்டர்கள் தியாகராஜன், கீர்த்தி.

'மோசடி குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'

சீனியர் எஸ்.பி. கலைவாணன் மேலும் கூறுகையில், இணையதளம் சைபர் குற்றங்கள் ட்ரெண்ட், முன்பை சைபர் கிரைம், பெட்கல் ஆகியவற்றில் அளிக்கப்படும் புகார் மனுக்களின் அடிப்படையில் பொதுமக்களை அச்சுறுத்தி, அவர்களின் செல்போன் நம்பர், ஆதார், வங்கி கணக்கு விவரங்களை பெற்று, மோசடியில் ஈடுபடுகின்றனர். மேலும், கடத்தல், பணமோசடி, போதை பொருள் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத செயல்களுக்காக, மோசடி செய்பவர்கள் ஏழ்டல் எனும் கூறி பொதுமக்களை அச்சுறுத்துகின்றனர். பாதிக்கப்பட்டவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறி மிரட்டுகின்றனர். இதுபோன்ற மோசடி அழைப்புகள் வந்தால் உடனடியாக துண்டித்து விடுங்கள். இதுபோன்ற மோசடி அழைப்புகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் 1930 அல்லது 9489205246 என்ற தொலை பேசியில் தெரிவிக்கலாம் என்றார்.

போலீசார், மாணவர்கள் உறுதிமொழி ஏற்பு



புதுச்சேரி கடற்கரை சாலையில் போக்குவரத்து விழிப்புணர்வை வலியுறுத்தி போலீசார் நடைபயணத்தை தொடர்ந்து ஐ.ஜி. தலைமையில் போலீஸ் அதிகாரிகள் மற்றும் என்சிசி மாணவர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

ஊர்க்காவல் படை மாணவர்களுக்கு தீவிர பயிற்சி



புதுச்சேரி கோரிமேடு காவலர் மைதானத்தில் ஊர்க்காவல் படை பயிற்சி மாணவர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

IN MEMORY

RIP, DEAR COLLEAGUES

The following Police Personnel lost their lives in the year 2024. We deeply appreciate the outstanding services rendered by them while on duty and convey our heartfelt sympathies and condolences to the bereaved families.



E.Selvam, SGHC-3286



V.Murugan, SGHC-3493



S. Veeravathiran, SG ASI



N.S.Saravanan, SGSI



N.Hemamalini, WPC 3990



C.M. Preetha, SGSI



N.Radjy, SI of Police



D.Palaniraja, HC 2262



P.Prasanth kumar, SGASI

PUDUCHERRY POLICE



ANNUAL NEWSLETTER - 2024

police.py.gov.in

@ Puducherry Police

@ PondyTraffic

@ Puducherry Police @ PondyTraffic